AHARAM

# அகரம்

எண்: 11 எழுத்து: 11 நவம்பர் : 2017 | ஷபர் : 1439



# மின்மினி பூச்சிகள்

"மின்மினிகளிடம் காணப்படுகின்ற விசேட பண்பு, அவை வெளிப்படுத்தும் இயற்கையான வெளிச்சமாகும். மின்சாரமின்றி ஒளிரும் மின்விளக்குகள்தான் மின்மினிப் பூச்சிகள்."

50/-

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

10 NOV 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்

## தேசியமட்ட போட்டியின் சாதனையாளர்களை

# அகரம்

## வாழ்த்துகிறது...




### 1 ஆம் இடம்

கி/திரு/கிண்ணியா மு.ம.ம.வி.
கிண்ணியா
(கிழக்கு மாகாணம்)






### 2 ஆம் இடம்

சில/அல் ஹிரா மு.ம.வி,
கொட்டாரமுல்ல
(வடமேல் மாகாணம்)







### 3 ஆம் இடம்


தெ/துந்துவ மு.ம.வி.
பெந்தொட்ட
(தென்மாகாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**மின்மினிகளிடம் காணப்படுகின்ற விசேட பண்பு அவை வெளிப்படுத்தும் இயற்கையான வெளிச்சமாகும். மின்சாரம் இல்லாது ஒளிரும் மின்விளக்குகள்தான் மின்மினிப் பூச்சிகள்.**










# AHARAM அகரம்

எண்: 11 - நவம்பர் : 2017 - எழுத்து: 11




PUBLIC LIBRARY
JAFFNA

ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர் M.Ed

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்

## பாடத்திட்டம்


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| வரலாறு | 34 |
| அரபு மொழி | 14 |





36

**தொடர்புகளுக்கு:**

**அகரம்**
**77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை**
**கொழும்பு 00900**
**தொ.பே : 077 741 2561**
**பெக்ஸ் : 011 268 6030**
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com

**சந்தா விபரம்**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வி என்பது விலகி நிற்கும் வெற்றி...

பரீட்சை முடிவுகளையும் பரீட்சைகளையும் எதிர்கொண்டிருக்கும் ஒரு பருவத்தில் சில விடயங்களை நினைவுபடுத்துவது பொருத்தம் எனக் கருதுகிறோம். ஒருவரது வாழ்வில் வெற்றி-தோல்வி என்பவற்றைத் தீர்மானிப்பது அவரது சமூக, பொருளாதார வசதிகளை விடவும் மனதில் தோன்றி மறையும் எண்ணங்களும் அவருடைய தொடரான முயற்சியுமாகும். வாகனத்தை எப்படி எரிபொருள் இயக்குகின்றதோ, ஆகாயத்தில் விரியும் பட்டத்தை எவ்வாறு காற்று இயக்குகின்றதோ அதேபோன்றுதான், நித்தம் நித்தம் நம் மனதில் தோன்றி மறையும் எண்ணங்கள் நம்மை இயக்குகின்றன; வெற்றியின்பால் எம்மை அழைத்துச் செல்கின்றன. தோன்றும் எண்ணங்கள் உறுதியாக இருப்பின், வாழ்வின் நகர்வும் வெற்றியை நோக்கி பிரகாசிக்கும் என்பது உண்மை.

பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்கள் அப்பரீட்சைகளில் கிடைக்கும் வெற்றியும் தோல்வியும் முழு வாழ்க்கையின் வெற்றியுமல்ல, தோல்வியுமல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இலக்கில் ஒரு முறை தோல்வி கண்டவர்கள் அத்தோல்விகளிலிருந்து வெற்றியடைந்த வரலாறுகளும் வரலாற்று ஏடுகளில் பதியப்பட்டிருப்பதை நம்மால் காண முடிகிறது. அவ்வாறே, பரீட்சைகளில் ஒரு முறை சித்திய டையத் தவறியவர்கள் வாழ்க்கையில் தோல்வியடைந்ததாக அர்த்தம் கொள்ளக் கூடாது. பாடசாலைக் காலங்களில் இடம்பெறுகின்ற பரீட்சை களில் சித்தியடைவது, சித்தியடையத்தவறுவது அல்லது போட்டி நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு அவற்றில் வெற்றியடைவது அல்லது தோல்வி காண்பதல்லொம் சகஜமானவை.

அத்தோடு, நாம் ஒரு பரீட்சையில் அல்லது போட்டியில் சந்திக்கின்ற தோல்வி எமது வாழ்வில் சரிவையோ, சலிப்பையோ தந்துவிடக் கூடாது. ''வெற்றி பெற்றுக் கொள்ள தோல்வி கற்றுக் கொள்ள'' என்ற நிலைப்பாட்டோடு தொடர்ந்தும் முயற்சிகளைச் செய்வதற்கான உத்வேகத்தை உள்ளங்களில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வரலாற்றில் தோல்வியை வெற்றியாக்கிய ஒரு சாதனையாளரின் வாழ்விலிருந்து சில வரிகள் எமக்கு படிப்பினையாக அமைகின்றன. ஒரு நிருபர் தாமஸ் ஆல்வா எடிசனைப் பார்த்து, நீங்கள் மின்சார விளக்கை கண்டுபிடிக்கும் முயற்சியில் 1000 முறை தோல்வி அடைந்தீர்களே! அதைப் பற்றி என்ன நினைகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு எடிசன், நான் 1000 முறை தோல்வி அடையவில்லை, இந்த மின்சார விளக்கு ஆயிரம் வழிமுறைகளை சோதித்த பிறகு கண்டுபிடிக்கப்பட்ட கண்டுபிடிப்பு. ஒவ்வொரு முறை நான் முயற்சி செய்யும்போதும் எந்த முறைகளிலெல்லாம் மின்சார விளக்கை எரிய வைக்க முடியாது என்று கண்டுபிடித்தேன் என்றார் .

மற்றவர்களின் பார்வையில் ஒரு செயல் தோல்வியாகத் தெரிந்தால் அதைப் பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நாம் யார், நம்முடைய குறிக்கோள் என்ன, எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம் என்பதைத் தீர்மானிக்கும் சக்தி நமக்குள்ளே உள்ளது. அத்தோடு, 'தோல்வி என்பது விலகி நிற்கும் வெற்றி' என்பதை புரிந்து நடப்பதுடன் நாம் எமது உள்ளத்தில் நேரான எண்ணங்களை வளர்த்துக் கொண்டு, எமது பணிகளில் ஈடுபடும்போது நாமும் சரித்திரத்தில் இடம்பிடிக்கும் சாதனையாளர்களாக மிளிரலாம், இன்ஷாஅல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள், ''பொறாமை கொள்வதை விட்டும் நான் உங்களை எச்சரிக்கின்றேன். நெருப்பு விறகை அழித்து விடுவதுபோன்று, நிச்சயமாக பொறாமை நல்லமல்களை அழித்துவிடும்.'' (அபூதாவுத்)

## நற்செயல்களை அழித்துவிடும் பொறாமை

மனித பண்பாடுகளையும் பெறுமதிமிக்க செயல்களையும் செல்லாக்காசாக ஆக்கிவிடக் கூடிய ஒரு விடயமாக காணப்படுகின்ற, பிற சகோதரனுக்கு அல்லாஹ் வழங்கியிருக்கும் அருட்கொடைகள் மீது கொள்ளும் பொறாமையின் பிடியிலிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டியதன் அவசியத்தையே இங்கு நபியவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

அல்குர்ஆனும் அல்லாஹ்வின் தூதரவர்களும் மனிதன், தனது பிற சகோதரனுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என வழிகா[illegible]ர். இவ்வழிகாட்டல்கள் முஸ்லிமின் சிறந்த [illegible]புகளுக்கான அடிப்படைகளாக அமைந்துள்ளன.

இஸ்லாம் வெறுத்தொதுக்குகின்ற ஒரு பண்பாக பொறாமை கொள்ளும் மனப்பாங்கு உள்ளது. ஒரு மனிதன் பொறாமை கொள்கின்றபோது அவனது நற்செயல்கள் அனைத்தும் அழிந்து விடுகின்றன என்பதை, விறகை நெருப்பு எரிப்பதற்கு ஒப்பிட்டு அழகிய முறையில் நபியவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மற்றவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்டிருக்கும் அருள்களைக் கண்டு பொறாமை கொள்கின்ற உள்ளம் இவ்வுலகில் வாழ்கின்ற ஈமானில் பலவீனமுற்ற உள்ளமாகும். அது இவ்வுலகில் நிம்மதியுடன் இருக்காது. ஏனெனில், அது இறை நியதியை அங்கீகரிக்க மறந்து விட்டது. இதனால் எப்படியேனும் மற்றவனுக்கு குழிபறிக்க அல்லது மற்றவனிடமுள்ள அருளைத் தட்டிப் பறிக்க பேராவலோடு செயற்படும். இதன் விளைவாக இப்பொறாமை யார் மீது கொள்ளப்படுகின்றதோ அவனும் பாதிக்கப்படுகின்றான்.

இக்காலத்தில் இப்பண்பு மிகப் பெரும் மனநோயாக மாறியுள்ளது. பாடசாலைச் சிறுவர்கள் தொடக்கம் சமூகத்தில் உயர்மட்டத்தில் உள்ளோர் வரை இது வியாபித்துள்ளது. சில திறமையான மாணவர்களது அடைவுமட்டத்தைக் கண்டு பிற மாணவர்களும் அவர்களது பெற்றோரும் பொறாமை கொள்கின்றனர்.

இப்பொறாமையானது நிச்சயமாக மனித உள்ளத்தில் அல்லாஹ்வின் சிந்தனை குடிகொள்ள ஒருபோதும் இடமளிக்காது. இவர்கள் தாம் நினைத்த பிரகாரம் மற்ற மனிதனுக்கு தீங்கு விளைவிக்க முயல்வார்கள்.

எனினும், பலவீனமானவர்கள் தமது முயற்சியையும் உயர்வுக்கான வழிகளையும் அதிகரிக்கின்றபோது அந்த பொறாமையின் விளைவை நாம் ஏற்றுக் கொள்ளலாம். இன்று அடிக்கடி பேசப்படுகின்ற ஒரு விடயம்தான், பொறாமை கொள்ளும் சில மாணவர்களால் திறமைமிக்க சில மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளிலிருந்து [illegible]ங்கிக் கொள்வதாகும்.

இதுபோன்ற பல நிகழ்வுகள் உலக வரலாற்றில் இடம்பெற்றுள்ளதை நாம் காண்கிறோம். உலகில் இடம்பெற்ற முதல் பாவமாகவும் பொறாமையே காணப்படுகின்றது.

ஷைத்தான், ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மீது கொண்ட பொறாமை ஆதம் (அலை) அவர்களை சுவனத்தை விட்டும் தூரப்படுத்தியது. ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களது பிள்ளைகளுக்கிடையில் ஏற்பட்ட பொறாமை அவர்களை கொலைகாரர்களாக மாற்றியது.

நபியவர்களுக்கு அல்லாஹ் பொறாமை கொள்பவனின் தீங்கை விட்டும் பாதுகாப்பு தேடுமாறு வழிகாட்டினார்கள்.

''இறைவா! பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும்போது (ஏற்படும்) தீங்கை விட்டும் (உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்)'' *(113:05)*

இவ் அல்குர்ஆன் வசனத்தையும் மேலுள்ள ஹதீஸையும் நோக்கும்போது பொறாமை கொள்வது இரு சாராரையும் அதாவது, பொறாமை கொள்பவனையும் கொள்ளப்படுபவனையும் பாதிக்கின்றது என்பது புலனாகின்றது.

ஆகவே, மாணவச் செல்வங்களாகிய நாமும் எம்வாழ்வில் இதுபோன்ற மிக மோசமான, இஸ்லாம் வெறுக்கின்ற பண்புகள் எம்மிடம் வந்து விடாது, மற்றவர்களுக்கு நன்மை பயக்கின்ற நல்லுள்ளங்களாகத் திகழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள்

தொடர் - 07

கிஸஸ் அல்ஹைவான் பில் குர்ஆன் எனப்படும் அல்குர்ஆன் கூறும் விலங்குகளின் கதைகள் என்ற நூலை அகரம் வாசகர்களுக்காக தொடராகத் தர உள்ளோம், இன்ஷா அல்லாஹ்.

அறபியில்: அஹ்மத் பஹ்ஜத் | மலையாளத்திலிருந்து தமிழில்: ஜெ. இஸ்ஹாக்

# ஸாலிஹ் நபியின் ஒட்டகம் - 4



எல்லோரும் என்னை விரும்பினார்கள். என்றாலும், அவர்கள் என்மீது செலுத்திய அன்பு என்னால் அவர்களுக்குக் கிடைத்த பயனைக் கருத்திற் கொண்டதாக இருந்தது! இத்தகைய சிநேகம் இந்தப் பயன் இல்லாமல் போகும்போது மறைந்து விடும் என்பது எனக்குத் தெரியும். ஆயினும், அதனை நினைத்து இங்கே நிற்கவில்லை.

ஸாலிஹ் நபியை விசுவாசித்த ஏழைகள் என்னை அதிகம் நேசித்தார்கள். அவர்கள் என்னை அல்லாஹ்வின் ஒட்டகம் என்றே அழைத்தார்கள். அதேவேளை, ஸாலிஹ் நபியின் சமூகத்தவர்களோ என்னை ஸாலிஹின் ஒட்டகம் என்றே அழைத்தனர்.

சில நாட்கள் கடந்து போயின. மெல்லிய ஒரு கீற்று வெறுப்பு ஸாலிஹ் நபியின் சமூகத்தில் உருவாகுவது எனக்குத் தெரிந்தது.

இறைநிராகரிப்பாளர்களுக்கும் ஸாலிஹ் நபியின் அற்புதத்தை விசுவாசித்த முஸ்லிம்களுக்கும் இடையே மெல்ல மெல்ல வாதப்பிரதிவாதங்கள் உருவாகத் தொடங்கின!

அந்த சமூகத்தில் இருந்த ஆணவம் கொண்ட சிலர் இந்த இறை விசுவாசிகளைப் பார்த்து பின்வருமாறு வினாத் தொடுத்தனர்:

''ஸாலிஹ் உண்மையிலேயே இறைவனின் தூதர் என்பதை நீங்கள் நம்புகின்றீர்களா?''

''ஆம், அவர் இறைவனின் உண்மையான தூதர் என்பதை நாங்கள் விசுவாசிக்கின்றோம்'' என்று அவர்கள் பதிலளித்தார்கள்.


கர்வம் கொண்ட அந்த செல்வந்தர்கள் சொன்னார்கள்:

''நீங்கள் விசுவாசித்ததை நாங்கள் நிராகரிக்கின்றோம்''

இந்த தர்க்கங்கள் ஸாலிஹ் நபியின் சமூகத்தை இரண்டு கூட்டத்தினர்களாக மாற்றின. அதில் ஒன்று, பிரமுகர்களான நிராகரிக்கும் கூட்டம்! இரண்டாவது, ஏழைகளான விசுவாசிகளின் கூட்டம்!

ஆரம்பத்தில் ஏழைகளின் விசுவாசத்தை பரிகசிக்கும் விதத்தில்தான் இந்த ஏளனப் பேச்சுக்கள் ஆரம்பித்தன. அதற்கு இறை விசுவாசிகள் கொடுத்த உறுதியான பதில் மேல் மட்டத்தினரை கோபத்திற்கு உள்ளாக்கியது.

ஸாலிஹ் நபி நிகழ்த்திய அற்புதத்தைக் குறித்து எந்த விமர்சனமும் முன்வைக்கப்படவில்லை. மாற்றமாக, இறைத் தூதுத்துவம் குறித்தும் இறை வழிகாட்டல் குறித்தும் ஏகத்துவம் குறித்தும் ஆட்சேபனைகளையும் ஐயங்களையும் ஏற்படுத்த முனைந்தார்கள்.



சத்திய விசுவாசிகளின் மறுமொழி இப்பிரமுகர்களுக்குப் பிடிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, ''நீங்கள் விசுவாசித்ததை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை'' என்று அவர்களை மட்டம்தட்ட எத்தனித்தார்கள். நீங்கள் விசுவாசம் கொண்டது ஒன்றே நாங்கள் அதனை சந்தேகம் கொள்வதற்குப் போதுமான காரணமாகும். நீங்கள் விசுவாசித்த தன் காரணமாக நாங்கள் விசுவாசம் கொள்ள மாட்டோம். இதுதான் அவர்களின் ஆட்சேபனை யின் சாரமாக இருந்தது.

சத்திய விசுவாசிகளும் அசத்தியவாதிகளும் பிரிந்து போனார்கள். நிராகரிப்பாளர்கள் தமது மாளிகையில் அன்றிரவு கூடினார்கள். இறை விசுவாசிகளின் மீது அவர்களுக்கு கடுத்த கோபம் ஏற்பட்டிருந்தது. அது எந்த நேரமும் வெடித்துப் பெருகலாம்.

கோத்திரத் தலைவனின் கோபாவேசமான பேச்சு அந்த மாளிகையில் கூடியிருந்தவர்களை உலுக்கியது. வரலாறாகப் போகின்ற அந்த ஆலோ சனைக் கூட்டம் அந்த கொட்டாரத்தில் நடை பெற்றுக் கொண்டிருந்தது.

அந்த கூட்டத்தில் கூடியிருந்தவர்களில் எவரும் ஸாலிஹ் நபியை விசுவாசித்திருக்கவில்லை; நான் அல்லாஹ்வின் அற்புதம் என்பதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசனுக்கு எதிராக சதி செய்யும் இருவராகவே என்னையும் எனது குட்டியையும் அவர்கள் பார்த்தார்கள்.

எமது வருகை இவ்வளவு காலமும் பொருளாதார அடிமைத்தனத்தில் ஆழ்ந்திருந்த ஏழைகளை சுதந்திரவானர்களாக மாற்றியது. நாங்கள் அந்த மக்களை விடுதலை செய்த புரட்சியாளர்களாக இந்த கோத்திரப் பிரமுகர்களுக்குத் தோன்றியிருக்க வேண்டும். இதனால் அந்தத் தலைவன் இவ்வாறு பேசினான்: ''தன்னிஷ்டப்படி செயற்படுகின்ற ஓர் ஒட்டகம் மக்கள் மீதுள்ள எமது ஆதிக்கத்தை அழித்துக் கொண்டிருக்கிறது. இதனை இப்படியே விட்டுவைக்க முடியாது! ஆவேசமாக கோத்திரத் தலைவன் முழங்கிக் கொண்டிருந்தான்.

சபை கோத்திரத் தலைவனின் கருத்தை அப் படியே ஆமோதித்தது. சபையிலிருந்து ஒருவன் எழுந்து சொன்னான்: ''இந்த ஒட்டகம் உயிரோடு இருக்கும் வரைக்கும் ஸாலிஹின் அற்புதம் மக்களின் மனதை விட்டு மறையாது. நாளாந்தம் அவர்களின் விசுவாசம் அதிகரித்துச் செல்கின்றது! இதனைத் தடுப்பதற்கு என்ன செய்யலாம்?''

''ஒட்டகத்தைக் கொன்றொழிப்பதே இதற்கு ஒரே வழி!'' இன்னொருவன் உரத்து முழங்கினான்.

சமூது கூட்டத்தினர் அன்றிரவு எடுத்த வரலாற் றுத் தீர்மானம்தான் என்னை கொலை செய்து விடுவது என்பதாகும். இதன் விளைவு என்னவாகும் என்பதை அவர்கள் சிந்திக்கவே இல்லை.

ஆயினும், ஒட்டகத்திற்கு தீங்கு விளைவித்தால் என்ன நடக்கும் என்று ஸாலிஹ் நபி ஏற்கனவே முன்னறிவிப்பு நல்கியிருந்ததை அப்போது ஞாப கப்படுத்தினார்கள். அவர்கள் அது குறித்தும் நீண்ட நேரம் ஆலோசனை செய்தார்கள். இறுதி வரைக்கும் அவர்களால் உறுதியான ஒரு முடிவை எடுக்க முடியவில்லை.

(இன்ஷா அல்லாஹ் தொடரும்)





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் ஆலிப் அலி (இஸ்லாஹி)
BA.(cey), Dip. in psychological Counseling.
www.aliaalif.tk / aalifali@gmail.com



# மின்மினி பூச்சிகள்

இரவு நேரத்தில் பரந்த வயல் வெளியையோ அல்லது அடர்ந்த மரத் தோப்பையோ அமைதியாக உற்றுப் பாருங்கள். வானில் நட்சத்திரங்கள் விட்டு விட்டு ஒளிர்வதைப்போல நூற்றுக்கணக்கில் மின் மினிப் பூச்சிகள் அப்பகுதியெங்கும் மின்னி மின்னிப் பறப்பதைக் கண்டு மகிழலாம். உண்மையிலேயே இரசனை உணர்வுடன் பார்ப்பீர்களானால் இனம்புரியாத அமைதியும் நிம்மதியும் உங்கள் உள்ளங்களை ஆட்கொள்ளும். வல்லவனின் படைப்புகள் யாவுமே அதிசயம்தான். அதில் மின்மினியும் ஒன்றுதான்.

### அறிமுகம்

மின்மினிப் பூச்சிகளை ஆங்கிலத்தில் **Firefly** என்று அழைக்கின்றனர். இவை **Cleopatra** என்ற குடும்பத்தைச் சேர்ந்த வண்டுகள் ஆகும். அதிக குளிர் பிரதேசமான ஆர்டிக், அண்டார்டிக் பனிப் பகுதிகள் தவிர்ந்த மற்றைய எல்லா இடங்களிலும் இவை வாழ்கின்றன. நகர்ப்புறங்களை செயற்கை மின்குமிழ்கள் அலங்கரிக்க கிராமப்புறங்களை மின்மினிப் பூச்சிகள் இன்னும் அழகுற அலங்கரித்து உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன. ஒவ்வொரு படைப்பிலும் அல்லாஹ் ஏதோ ஒரு விசேட அற்புதப் பண்பை வைத்திருக்கின்றான். அந்தவகையில், மின்மினிகளிடம் காணப்படுகின்ற விசேட பண்பு அவை வெளிப்படுத்தும் இயற்கையான வெளிச்சமாகும். மின்சாரம் இல்லாது ஒளிரும் மின் விளக்குகள்தான் மின்மினிப் பூச்சிகள்.

### தோற்ற அமைப்பு

உலகில் 2000 வகையான மின்மினிப் பூச்சிகள் இருப்பதாக கண்டுபிடிப்புத் தகவல்கள் கூறுகின்றன. மஞ்சள், பச்சை, கறுப்பு, பழுப்பு போன்ற நிறங்களில் அவை வித்தியாசமான அளவுகளில் வாழ்கின்றன. இரு பக்கமாக இரண்டு சிறகுகளும் ஆறு கால்களும் உணர் கொம்புகள் இரண்டும் இவற்றுக்கு உண்டு. பெண் மின்மினி ஆண் மினியை விட சற்று பெரிதாக இருக்கும். அதேபோன்று, ஆண் மின்மினி பெண்ணின் நிறத்தை விட கடுமையான **(Dark)** நிறத்தில் காணப்படும்.

### ஒளிரும் அற்புதம்

மின்மினிகள் சுயமாக ஒளிர்வதை 'உயிரொளிர்வு' **(Bioluminescence)** என விஞ்ஞானத்தில் அழைப்பர். இது ஒரு சிக்கல் நிறைந்த உயிர்வேதியியல் **(bio chemical)** முறைமையாகும். மின்மினிப் பூச்சி தரும் ஒளியில் எரிபொருளாகப் பயன்படுவது லூசிஃபெரின் **(luciferin)** என்ற வேதியியல் கூட்டுப் பொருள். இது பூச்சியின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**"light emitting organ'** எனும் ஒளியுமிழ் உறுப்பில் நிறைந்துள்ளது. இந்த லூசிஃபெரின் எரிபொருளுடன் லூசிஃபெரெஸ் என்ற என்ஸைமும் சுவாசத்தின்போது உட்செல்லும் ஒட்சிசனும் **(oxygen)** அவற்றின் கலங்களில் **(cells)** நிறைந்துள்ள **ATP** என்ற வேதியியல் பொருளும் மற்றும் கல்சியம், மக்னீசியம் என்பவையும் ஒன்றாக கூட்டுச்சேர்ந்து கலவை புரிவதால் அவற்றின் உடலில் ஒளி உற்பத்தியாகின்றது. இவற்றில் ஏதேனும் ஒன்று இல்லாவிடினும் ஒளி உற்பத்தியாகாது.

உடலில் உற்பத்தியாகும் ஒளியை வெளிப்படுத்துவதற்காக ஒளி ஊடுருவும் அமைப்பு **(Transparent)** அவற்றின் அடிவயிற்றுப் பகுதியில் அமைந்துள்ளது. அதிலிருந்து பச்சை, மஞ்சள், சிவப்பு போன்ற நிறங்களில் 510 முதல் 670 நனோ மீற்றரிற்கு உட்பட்ட ஒளி அலைகளை அவை வெளியிடுகின்றன. மின்மினிப் பூச்சி விட்டு விட்டு ஒளிர்வதற்குக் காரணம், அ[illegible] உறுப்புக்குச் செல்லும் நரம்புத் தூண்டலகள **(nerve impulses)**விட்டு விட்டுச் செயற்படுவதனாலேயாகும்.

### ***ஒளியின் சக்தி***

மெழுகுவர்த்தி அல்லது மின்விளக்கு போன்றவற்றிலிருந்து வரும் ஒளியில் வெப்பம் தான் அதிகம். ஆனால், மின்மினிகளில் எந்த வெப்பமும் உண்டாவதில்லை. இதனை ஆச்சரியமிக்க ஒரு விடயமாகவே விஞ்ஞானிகள் பார்க்கின்றனர். ஏனெனில், மின் குமிழ் ஒன்று எரியும் போது அதிலிருந்து 10% மான வெளிச்சமே வெளிவருகின்றது. மீதி 90% உம் வெப்பம்தான். ஆனால், மின்மினிகளிலிருந்து மொத்தமாகவே 100% வெளிச்சம் மட்டுமே வெளியாகின்றது. அதனால்தான் மின்மினிகளைத் தொட்டாலும் சுடுவதில்லை. அந்த ஒளியை 'குளிர் வெளிச்சம்' **(Cold Light)** என்று கூறுவார்கள். தூக்கணாங் குருவி போன்ற சில பறவைகள் தமது கூடுகளில் வெளிச்சத்திற்காக மின்மினிகளைப் பிடித்து வைத்துக் கொள்வதாகவும் கூறப்படுகின்றது.





### ***ஒளியை வெளிப்படுத்துவதன் காரணம்:***

இவ்வாறு மின்மினிகள் ஒளியை உற்பத்தி செய்து அதனை வெளிப்படுத்துவதற்கு முக்கியமான சில காரணங்கள் உள்ளன. ஒன்று, ஏனைய மின்மினிகளுடன் தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதற்காக இவ்வாறு ஒளியை வெளிப்படுத்துகின்றன. இரண்டாவது, ஆண், பெண் மின்மினிகள் தமது துணையைக் கவர்ந்துகொள்வதற்காகவும் இந்த ஒளிப் பாய்ச்சல் செயற்பாட்டைச் செய்கின்றன. மூன்றாவது, கவர்ந்திழுத்த துணையுடன் இணை சேரும்போதும் ஒளியை வெளிப்படுத்துகின்றன. நான்காவது, தமக்கு உணவுத் தேவை ஏற்படும்போது சிறிய பூச்சிகளையும் புழுக்களையும் வேட்டையாடி உண்பதற்கு அவற்றைத் தம்பால் கவர்ந்திழுப்பதற்கும் ஒளியை வெளிப்படுத்துகின்றன. ஐந்தாவது, ஆபத்து நேரும்போது ஏனைய பூச்சிகளுக்கு எச்சரிக்கை சமிக்ஞையாக தகவல் அனுப்பி உசார்படுத்தவும் ஒளியை வெளிப்படுத்துகின்றன.


இவ்வாறு பல்வேறு செயற்பாடுகளுக்கு இவை தமது உடலில் ஒளியை உற்பத்தி செய்து அதனை வெளிப்படுத்திப் பயன்படுத்துவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒரு பரந்த வயல் வெளியையோ, மரத் தோப்பையே அவதானித்தால் அனைத்து மின்மினிகளும் ஒரே தாளத்தில், சிலபோது ஒரே நேரத்தில் விட்டு விட்டு ஒளிர்ந்து இத்தொடர்பாடல் செயன் முறைகளைப் பேணும் அழகைக் கண்டு கொள்ளலாம்.

### ***வாழ்க்கை முறை:***

மின்மினிகள் தமது வாழும் பகுதியை நிலமும் நீர் நிலைகளும் அடங்கிய ஓரளவு குளிர் சீதோஷ்ண நிலையுள்ள இடங்களைத் தெரிவு செய்து கொள்கின்றன. ஏனெனில், அவற்றின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனப் பெருக்கத்திற்கும் உணவுக்கும் வசதியான இடம் இதுதான். ஆண், பெண் மின்மினிகள் இணை சேர்ந்து ஓரிரு நாட்களில் பெண் பூச்சி நிலத்தில் அல்லது காய்ந்த மரங்களில் சிறு துளையிட்டு முட்டையிடும். மூன்று வாரங்களின் பின் முட்டைகளில் இருந்து குஞ்சுப் புழுக்கள் வெளிவரும். இவை லாவா **(larvae)** என்று அழைக்கப்படுகின்றன. பிறந்து மூன்று நாட்களில் இந்தக் குஞ்சு லாவாக்களும் ஒளியை வெளிப்படுத்த ஆரம்பிக்கின்றன. இவையும் ஒளியை வெளிப் படுத்துவதால் இவற்றுக்கு **"Glowworms'** என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது. இந்த புழுக்கள் துவாரங்களிலேயே சில வாரங்களைக் கழிக்கும். பின்பு கால்கள் முளைத்த மரவட்டைகளாக மாறியதும் துவாரங்களில் இருந்து வெளியே வந்து தமக்கான உணவுகளைத் தாமே தேடிக் கொள்ள ஆரம்பிக்கும். ஒரு மாத காலம் செல்லும்போது சிறகுகள் எல்லாம் முளைத்த மின்மினிப் பூச்சியாக இவை வளர்ச்சியடைந்து மின்னி மின்னிப் பறக்க ஆரம்பிக்கின்றன.

***உணவு முறை:***



சிறு பூச்சிகள், அட்டை, நத்தை, மண்புழு போன்றவற்றை தமது வெளிச்சத்தை வெளிப்படுத்தி கவர்ந்திழுத்து, வேட்டையாடி, உண்டு வளரும். இன்னும் சில வகைப் புழுக்களும் பூச்சிகளும் தாவர இலைகளை உண்டு வாழும். வெய்யில் காலங்களில் உணவினை நன்கு எடுத்துக் கொண்டு வளர்ந்து வரும். குளிர்காலத்தில் இருக்கும் இடம் தெரியாமல் மண்ணுக்கடியில் சென்று ஒளிந்திருக்கும். இவை இரையை வேட்டையாடும் விதமே வித்தியாசமாக இருக்கும். முதலில் இரையைப் பிடித்து தன் முகப் பகுதியில் இருக்கும் கத்தி போன்ற கொடுக்கால் கொட்டி மயக்கமடைச் செய்கிறது. அதன் பின் செரிமான நொதியங்களையும் இன்னும் சில வேதியியல் பொருள்களையும் இரையினுள் செலுத்துகின்றது. இதனால் இரையானது ஒரு சில மணிநேரத்தில் கூழ்மமாக மாறிவிடும். பின்னர் இவ் இரையைச் சுற்றி மின்மினிப் புழுக்களும் மின்மினிப் பூச்சி களும் அமர்ந்து கொண்டு தங்களுக்குத் தேவையான அளவு உணவை உறிஞ்சிக் குடிக்கின்றன.

***அழிந்து வரும் மின்மினிகள்:***

இன்றைய காலத்தில் அழிவுக்குள்ளாகி வரும் பல்வேறு உயிரினங்களின் வரிசையில் மின்மினிகளும் இடம்பெறுகின்றன. முன்பெல்லாம் இரவு நேரங்களில் தாராளமாகக் காணக்கிடைத்த மின்மினிகளை இன்று அரிதாகவே காண முடியுமாக உள்ளது. இன்றைய சிறார்களில் மின்மினிப் பூச்சிகளைக் கண்டிருப்பவர்கள் கூட அரிதாகவே இருப்பார்கள். சில நாடுகளில் மின்மினிகளைப் பாதுகாப்பதற்கான திட்டங்கள் கூட முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அமெரிக் காவின் சில காட்டுப் பகுதிகளில் மின் விளக்குகள் போடுவதைத் தடைசெய்து பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்துள்ளனர். அபரிமிதமான நகரமயமாக்கலும், இரவைப் பகலாக்கும் ஒளி விளக்குகளும் பூச்சிக் கொல்லி நாசினிகளும் தான் மின்மினிகளின் அழிவிற்கு முதற்தரக் கார ணியாகியுள்ளன. இறைவனின் படைப்பாற்றலுக்கு நிகரே இல்லை, அல்ஹம்துலில்லாஹ்!

**இலங்கைக்குரிய பறவைகள்**



❀ கருங் கரிச்சான்

❀ விஞ்ஞானப் பெயர்:

**Dicrurus paradiseus lophorhinus**

இதனை தென்பகுதி ஈர வலயக் காடுகளில் காண முடியும. இதற்கு தனித்துவமாகப் பிரிந்த இரட்டை வால்கள் உண்டு. இது ஒரு **Drongo** இனப் பறவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் பொறுமை கொள்ள முடியாமல் அநியாயங்கள் அத்துமீறி விட்டன. மக்கா காபிர்கள் முஸ்லிம்களை தேடித் தேடி கொடுமை செய்து கொண்டிருந்தனர். பிலால் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை பாலைவனத்தில் கிடத்தி நெஞ்சில் பாராங்கல்லை தூக்கி வைத்திருந்தார்கள். ஹப்பாப் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை வெந்தழில் போட்டு வதக்கிக் கொண்டிருந்தார்கள். யாரும் தப்பவில்லை. எல்லாருடைய உயிருக்கும் ஆபத்திருந்தது.

# அச்சம் ஏன்...?

எம்.ஏ. ரஹ்மான்

இந்த அபாயகரமான நிலையால் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தானும் சில காலம் மக்காவை விட்டு வெளியே சென்று தங்கியிருக்கலாம் என முடிவெடுத்து மக்காவை விட்டு புறப்பட்டு சென்று கொண்டிருந்தார்கள். இச் சமயத்தில்தான் அவர்களை மக்காவின் மிக முக்கியமான பிரமுகரும் அபூபக்ர் அவர்களின் நண்பருமான இப்னு திக்னா சந்தித்தார்.

''ஐயோ உங்களைப் போன்ற நல்லவர்கள் மக்காவை விட்டு செல்லக் கூடாது'' என அலறியவர், தான் அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகக் கூறி அழைத்து வந்தார். தனது நண்பரை கஃபாவுக்கு அழைத்துச் சென்ற இப்னு திக்னா, தான் அவருக்கு பாதுகாப்பு வழங்குவதாகவும் யாரும் அவருக்கு துன்பம் செய்யக் கூடாது என்றும் அறிவித்தார்கள். மக்கா காபிர்களும் வேறு வழியின்றி அதனை ஒத்துக் கொண்டார்கள்.

தனது வீட்டுக்கு திரும்பிய அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தனது வீட்டுக்கு அருகாமையில் சிறிய பள்ளிவாசல் ஒன்றைக் கட்டி அதில் வணங்கவும் சப்தமாக குர்ஆன் ஓதவும் ஆரம்பித்து விட்டார்கள்.

அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் குரல் மிகவும் இனிமையானது. அந்தக் குரலிலிருந்து உணர்வு பொங்க அவர்கள் ஓதும் குர்ஆன் வசனங்கள் காபிர்களின் மனதில் புகுந்து வசியம் செய்து, அவர்களை அந்தச் சிறிய பள்ளிவாசலுக்கு அழைத்து வந்தன. பெண்களும் சிறார்களுமாக ஏகப்பட்டோர் தினமும் அங்கு குழுமத் துவங்கி விட்டனர்.

இதனைக் கண்டு அச்சமடைந்த காபிர்கள் ஓடிச் சென்று இப்னு திக்னாவிடம் முறையிட்டார்கள். இதனால் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அணுகிய இப்னு திக்னா அவரின் இபாதத்தை சப்தமின்றி, வீட்டுக்குள் நிறைவேற்றுமாறு கூற முற்பட்ட போது, அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களோ, ''அல்லாஹ்வை வணங்கும் விடயத்தில் நான் யாருக்கும் அச்சப்பட தேவையில்லை. உங்களின் பாதுகாப்பு இனி எனக்கு தேவைப்படாது என்று கூறி விட்டார்கள்''


எம்மைப் பாதுகாக்க அல்லாஹ் இருக்கும்போது அடுத்தவர்களின் பாதுகாப்பு நமக்கு எதற்கு?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோபல் பரிசு!




1. நோபல் பரிசை சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஆல்பிரட் நோபல், 1901 இல் நிறுவினார்.
2. ஆல்பிரட் நோபல் 'டைனமைட்' என்ற வெடிபொருளைக் கண்டுபிடித்தவர்.
3. அமைதி, இலக்கியம், வேதியியல், மருத்துவம், பொருளாதாரம் ஆகிய துறைகளுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது.
4. மேரி க்யூரி இயற்பியல், வேதியல் துறைகளில் இரு முறை நோபல் பரிசு பெற்றுள்ளார்.
5. நோபல் பரிசு ஆண்டு தோறும் ஆல்பிரட் நோபலின் நினைவு நாளான டிசம்பர் 10 ஆம் திகதி வழங்கப்படுகிறது.

✍ **எம்.வை.எம். ரிஸ்னி**
**சில்மியாபுர**

# நோபல் பரிசு - 2017

- மருத்துவம்: மிச்சல் வோரன் யோங், மிச்சல் ரொஸ்பாஷ், ஜெப்ரிசி ஹால்
- வேதியல்: ஜோகிம் பிராங்க், ரிச்சர்ட் ஹென்டர்சன், ஜாக்ஸ் டெபோசெட்
- இயற்பியல்: ரெய்னர் ராயவெய்ஸ், பேரிகிலார்க் பெரிஷ், கிப் ஸ்டீபன் தோர்
- இலக்கியம்: கசுவோ இசுகுரோ
- பொருளாதாரம்: ரிச்சர்டு தாலர்
- சமாதானம்: ''ஐகேன்'' என்ற அமைப்பு LNTERNATIONAL CAMPAIGN TO ABOLISH NUCLEAR WEAPONS (ICAN)




# வாழ்க்கையின் வெற்றிக்கான வழிகள்

- வாழ்க்கையில் துன்பங்கள் எப்போதும் தொடரத்தான் செய்யும். மனிதா! நீ கவலைப்படாதே. அவை எப்போதும் நிலைத்து நிற்காது.
- போதும் என்ற மனநிறைவுக்கு நிகரான செல்வம் எதுவும் இல்லை. பொறுமைக்கு நிகரான பண்பு வேறெதுவும் இல்லை. இது தான் வாழ்க்கையின் நியதி.
- நம்பிக்கை எனும் கயிற்றை வாழ்க்கையின் குறிக்கோளாக வைத்துக் கொள். குறிக்கோளை நீ மறந்தாயானால் வாழ்க்கையே பாழடைந்த வீடாகி விடும்.
- உன் குற்றங்களை எண்ண முன் மற்றவர்களின் குற்றங்களைக் காணாதே. உன் குறைகளை மற்றவர்கள் காணும் முன் உன்னை நீ திருத்திக் கொள். வாழ்க்கையில் வெற்றி காண்பாய்.
- துன்பம் என்பது ஒரு செடி. அதற்கு பொறுமை எனும் தண்ணீரை அடிக்கடி ஊற்ற வேண்டும்.
- வாழ்க்கையே தோல்வி என்று கவலைப்படாதீர். உமக்காக பெரும் வெற்றி காத்துக் கொண்டிருக்கிறது என்பதை மறந்து விடாதீர். வெற்றியும் தோல்வியும்தான் உன்னை சிறந்தவனாக்கும் ஆயுதம்.
- பரிசுத்தமான மனமுடையவர்தான் வாழ்க்கையில் எல்லாவற்றையும் பரிசுத்தமானவையாக காண முடியும்.
- நீ வெளிச்சத்தில் சென்றால் உலகமே உன்னைப் பின்தொடரும். ஆனால், நீ இருளில் சென்றால் உன் நிழல் கூட உன்னை பின் தொடராது. இதுவே வாழ்க்கையின் நிஜம்.



✍ **இக்பால் பாத்திமா ஜெஸா**
**சுமையா மகளிர் அ.க.**
**கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# உலகில் சிறியவை

| | |
|---|---|
| ☞ தேசிய கீதம் | ஜப்பான் |
| ☞ உயிரினம் | ரீங்காரப் பறவை |
| ☞ குடியரசு நாடு | நௌரு |
| ☞ சுதந்திர நாடு | வத்திகான் |
| ☞ பாலூட்டி | பாம்பின் D. Bird |
| ☞ கடல் | ஆட்டிக் சமுத்திரம் |
| ☞ செடி | உல்பிஃயா |
| ☞ இராணுவம் | அன்டோரா |
| ☞ பறவை | ஹனி ஈட்டர் |
| ☞ விலங்கு | சுண்டெலி |
| ☞ நூல் | கார்த்தரின் ஜெப நூல் |

✍ **எம்.எஸ்.எப். சீமா**
**பொ/திவுலான மு.ம.வி.**
**பொலன்னறுவை**



# ஊசியும் கத்தரிக்கோலும்

ஒரு தையற்காரர் தனது கடையில் ஒரு புதுத்துணியை எடுத்தார். அதை ஒரு பளபளக்கும் கத்திரிக் கோலால் துண்டுகளாக வெட்டினார். பின்னர் கத்திரிக்கோலைக் காலருகே போட்டுவிட்டு துணியைத் தைக்கலானார். துணி தைத்து முடிந்ததும் அந்த சிறிய ஊசியை எடுத்து தனது தலையிலிருந்த தொப்பியில் குத்தி பத்திரப்படுத்தினார்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவரது மகன் அவரிடம், ''அப்பா! கத்திரிக்கோல் விலையுயர்ந்தது, அழகானது. அதை அலட்சியமாக காலடியில் போடுகிறீர்கள். ஊசி சிறியது மலிவானது. ஆனால், அதை தலையில் வைத்து பாதுகாக்கிறீர்களே. அது ஏன்?'' என்று கேட்டான்.

''நீ சொல்வது உண்மைதான்... கத்திரிக்கோல் அழகாகவும் மதிப்புள்ளதாகவும் இருந்தாலும், அதன் செயல் வெட்டுவது. அதாவது பிரிப்பது. ஆனால், ஊசி சிறியதாகவும் மலிவானதாகவும் இருந்தாலும் அதன் செயல் இணைப்பது மட்டுமே! எதனுடைய மதிப்பும் அதன் செயலைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. அதன் உருவத்தை வைத்து அல்ல!'' என்று கூறினார் தந்தையான அந்த தையற்காரர்.

# பணத்தை செலவளித்து சந்தோசத்தை வாங்க முடியுமா?

- உங்கள் பணத்தைக் கொண்டு கட்டிலை வாங்க முடியும். ஆனால், தூக்கத்தை வாங்க முடியுமா?
- உங்கள் பணத்தைக் கொண்டு மாளிகையை வாங்க முடியும். ஆனால், ஆரோக்கியமான நல்லதொரு குடும்பத்தை வாங்க முடியுமா? உங்கள் பணத்தைக் கொண்டு வைத்தியரை வாங்க முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தை வாங்க முடியுமா?
- உங்கள் பணத்தைக் கொண்டு கடிகாரத்தை வாங்க முடியும். ஆனால், நேரத்தை வாங்க முடியுமா?
- உங்கள் பணத்தைக் கொண்டு புத்தகத்தை வாங்க முடியும். ஆனால், அறிவை வாங்க முடியுமா?
- உங்கள் பணத்தைக் கொண்டு நண்பரை வாங்க முடியும். ஆனால், அன்பை வாங்க முடியுமா?
- உங்கள் பணத்தைக் கொண்டு மனிதரை வாங்க முடியும். ஆனால் உறவை வாங்க முடியுமா?

✍ **லீரா நஸீர்**
**அல்முஃமினாத் பெ.அ.க. அக்குரணை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாட்டின் அபிவிருத்தியில் இன ஐக்கியத்தின் முக்கியத்துவம்



'இந்து சமுத்திரத்தின் முத்து' என எல்லோ ராலும் வர்ணிக்கப்படும் இலங்கை ஒரு பல்லின மக்கள் வாழும் நாடாகும். இலங்கையில் பௌத் தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் போன்ற வேறுபட்ட மதங்களைப் பின்பற்றும் மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

விஜயன் இலங்கைக்கு வந்ததும், அசோகன் பிக்குகள் மூலம் பௌத்த மதத்தை பரப்பியதும், ஒல்லாந்தர்கள், போர்த்துக்கேயர்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியதும், அரேபியர்கள் இலங்கை யில் இஸ்லாத்தைப் பரப்பியமைக்கும் காரணம் இலங்கையின் அமைவிடமேயாகும். இந்து சமுத் திரத்தின் மத்தியில் இலங்கை அமைந்திருப்பதாலும் இலங்கையின் நான்கு பக்கங்களும் கடலால் சூழ்ந்திருப்பதாலும் கப்பல் போக்குவரத்தின் மூலம் இலகுவில் இலங்கையை அடைய முடியு மென்பதாலும் பல மதங்களைச் சேர்ந்த குழுக்களின் தாக்கத்தை இலங்கையில் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையின் முதலாவது தலைநகரான அனுராதபுரத்திலும் இரண்டாவது தலைநகரான பொலன்னறுவையிலும் பௌத்த விகாரையின் இடிபாடுகள், புராதன மரபிற்குரிய இரண்டு சிவன் கோயில்கள், கியுபிக் அரபு எழுத்துகள், கற்சிலை யில் பொறிக்கப்பட்ட சிறிய சிலுவையொன்று ஆகியவை தொல்பொருள் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், நமது முன்னோர்கள் அனைத்து இன மக்களுடனும் பண்பாகவும், அன்பாகவும் ஒற்றுமையாகவும் நடந்து கொண்டிருந்தார்கள் எனவும், ஆட்சியாளர் கள் அனைத்து மதத்தவர்களுக்கும் சம உரிமை வழங்கி கௌரவித்திருந்தார்கள் எனவும் அனு மானிக்க முடிகிறது. அவர்களது ஒற்றுமையும் பண் பாடுகளும் எவ்வளவு உயர் நிலையில் இருந்ததோ அதேபோன்று, அவர்களது பொருளாதாரமும் வருமானமும் உயர்நிலையில் காணப்பட்டன.

பண்டைய கால வரலாற்றை எடுத்து நோக்கு வோமேயானால், இலங்கையின் விவசாய மட்ட மும் பொருளாதார மட்டமும் அதிஉயர் நிலையில் காணப்பட்டன. எமது நாட்டிலிருந்து ஏனைய நாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்யும் அள வுக்கு விவசாயத்தில் தன்னிறைவு காணப்பட்டது. இதனால் இலங்கை 'கீழைத்தேச தானியக் களஞ் சியம்' என வர்ணிக்கப்படும் அளவுக்கு உலக நாடு களிடையே சிறப்புப் பெற்றிருந்தது.

ஆனால், இன்றைய நிலை யாது? தோழர்களே! சர்வதேச நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்து கொண்டிருந்த நாம் உணவுப் பற்றாக்குறை காரணமாகவும் பொருளாதார வீழ்ச்சி காரணமா கவும் உலக நாடுகளிடையே அரிசியை இறக்குமதி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோம்.

அன்று நம் ஆட்சியாளர்கள் விவசாயத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் கூடிய அக்கறை காட்டி நாட்டின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தார்கள். ஆனால், இன்று இனக் கலவரங்களைத் தடுப்ப தற்கும் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்குமே கூடிய தொகையை அரசாங்கம் செலவிடுகிறது.

சர்வதேச ரீதியில் ஜப்பான், சீனா ஆகிய நாடு கள் அசுர வேகத்தில் வளர்ச்சியடைந்து வரும் இக் காலகட்டத்தில், இலங்கை மாத்திரம் மந்தகதியில் நகர்வதற்கு காரணம் யார்? சிந்தியுங்கள், சகோத ரர்களே! நிச்சயமாக இனப்பூசல்களே காரணமாகும். வெளியிடங்களிலிருந்து கத்தி தூக்கிக் கொண்டு நம்மைத் தாக்க வரும் எதிரிகளை விட, ஒரே தாய் நாட்டில் இருந்து கொண்டு ஒரே தாயின் புதல்வர் களாக இருந்தும் நம்மை நாமே அழித்துக் கொள்வது தானே மிகக் கொடுமையானது.

விவசாயத்தில் தன்னிறைவு காண்பதற்காகவும் கைத்தொழில் முன்னேற்றம் காண்பதற்காகவும் தொழிநுட்பத்தில் முதலிடம் பெறுவதற்காகவும் இன ஐக்கியம் எனும் கயிற்றை பற்றிப் பிடிப்போம்.

**சல்மா பர்ஹத் பர்ஸான்**
**அல்அஸ்ஹர் ம.க. தீஹாரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும்
அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. ஹிஜ்ரி 8 இல் மக்கா வெற்றியின்போது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடன் சென்ற முஸ்லிம் வீரர்களின் எண்ணிக்கை யாது?
2. குனூத் என்பதன் கருத்து யாது?
3. பிற்காலத்தில் முஸ்லிம்களின் வசமாகும் என்று அல்குர்ஆனில் எதிர்வுகூறப்பட்டுள்ள நகரம் எது?
4. நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு செவிலித் தாய் ஹலீமா அவர்கள் பாலூட்டும் சமயத்தில், அவ்வன்னையின் பால்குடிக் குழந்தையாக இருந்த மகனின் பெயர் என்ன?
5. அல்வஸிய்யத் என்பது மரண சாசனத்தைக் குறிக்கின்றது. ஒருவர் மரணித்தால் அவருடைய கடன்கள் அவருடைய சொத்துக்களிலிருந்து கொடுக்கப்படுவது போல அவர் வஸிய்யத் செய்திருந்தால் அதனையும் கொடுக்க வேண்டும். அது அவரது செல்வத்தில் எத்தனை பங்கிற்கு மேற்படக் கூடாது?
6. இஸ்லாமிய நாகரிகத்தின் பொற்காலம் எனச் சரித்திர ஆசிரியர்களால் வர்ணிக்கப்படும் காலம் யாருடைய ஆட்சிக் காலமாகும்?
7. நுபுவ்வத்தின் பின் எத்தனையாம் ஆண்டில் ஐங்காலத் தொழுகை விதியாக்கப்பட்டது?
8. ஹாரூன்-அல்ரஷீத் அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் தமது ஆசிரியருள் ஒருவரை பிரதமராக நியமித்திருந்தார். அவரின் பெயர் என்ன?
9. ஹஸரத் அலி (ரழியலிலாஹு அன்ஹு) அவர்களைக் கொலை செய்தவரின் பெயர் என்ன?
10. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கலந்து கொண்ட யுத்தங்கள் எத்தனை?
11. குறைஷியர்களின் தலைவனாக இருந்து முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட்ட அபூசுபியான் ஹிஜ்ரி எத்தனையாம் ஆண்டில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்?
12. ஒரு நாள் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் தமது உதவியாளருடன் ஹர்ரா என்ற இடத்திற்குச் சென்று கொண்டிருந்தபோது, பசியால் பரிதவிக்கும் குழந்தைகளுடன் வேதனைப்படும் ஒரு தாய், குழந்தைகளைச் சமாளிப்பதற்காக அடுப்பில் நீரைச் சூடாக்கிக் கொண்டிருப்பதைக் கண்டு மனம் நெகிழ்ந்து மீண்டும் மதீனாவிற்கு வந்து உணவுப் பொருட்களை எடுத்துத் தனது முதுகிலேயே சுமந்து கொண்டு சென்று தானே சமைத்துப் பங்கிட்டுப் பசிக் கொடுமையை நீக்கினார்கள். இச்சந்தர்ப்பத்தில் மூட்டை சுமந்த மன்னர் உமர் (ரழியலிலாஹு அன்ஹு) அவர்களுடன் சென்ற உதவியாளரின் பெயர் என்ன?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்த ஆண்டு எது?
2. 3 ஆம் பராக்கிரம பாகுவைப் போரிலே தோற்கடித்துவிட்டு, குருணாகலையைத் தலைநகராக்கிய மன்னன் யார்?
3. சீனாவின் செய்தி ஸ்தாபனத்தின் பெயர் யாது?
4. உலகின் முதலாவது சுதந்திர வர்த்தக வலயம் 1959 இல் எந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது?
5. இலங்கை ஐ.நா. சபையில் 1955 ஆம் ஆண்டில் உறுப்புரிமை பெற்றது. சர்வதேச நிதி நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்ற ஆண்டு எது?
6. இலங்கை இந்து சமுத்திர முத்து என அழைக்கப்படுவதுபோல், அட்லாண்டிக் சமுத்திர முத்து என அழைக்கப்படும் நாடு எது?
7. ஓறுவிலயில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற தொழிற்சாலை எது?

**(விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# تَبَادَلِ الحِوَارَ مَعَ زَمِيْلِكَ كَمَا فِيْ المِثَالِ

## உனது சகபாடியுடன் உரையாடு

| | |
|---|---|
| عُمَر: هَلْ نَذْهَبُ إلى السُّوْقِ الآنَ؟ | இப்போது சந்தைக்குச் செல்வோமா? |
| أَحْمَدُ: نَذْهَبُ غَدًا ، إِنْ شَاءَ الله | இன்ஷா அல்லாஹ், நாளை செல்வோம். |
| عُمَر: هَلْ نَذْهَبُ إِلى كُولُوْمْبُوْ الآنَ؟ | இப்போது கொழும்புக்குப் போவோமா? |
| أَحْمَدُ: نَذْهَبُ غَدًا، إِنْ شَاءَ الله | இன்ஷா அல்லாஹ், நாம் நாளை செல்வோம். |
| عُمَر: هَلْ نَذْهَبُ إِلَى المدرسة الآنَ؟ | இப்போது நாம் பாடசாலைக்குப் போவோமா? |
| أَحْمَدُ: نَذْهَبُ غَدًا، إِنْ شَاءَ الله | இன்ஷா அல்லாஹ், நாளை செல்வோம். |
| عُمَر: هَلْ نَذْهَبُ إِلَى شَاطِئِ البَحْرِ الآنَ؟ | இப்போது நாம் கடற்கரைக்கு செல்வோமா? |
| أَحْمَدُ: نَذْهَبُ غَدًا، إِنْ شَاءَ الله | இன்ஷா அல்லாஹ் நாம் நாளை செல்வோம். |
| عُمَر: هَلْ نَذْهَبُ إِلَى الْمَلْعَبِ الآنَ؟ | இப்போது நாம் மைதானத்துக்கு செல்வோமா? |
| أَحْمَدُ: نَذْهَبُ غَدًا، إِنْ شَاءَ الله | இன்ஷா அல்லாஹ் நாளை செல்வோம். |
| عُمَر: هَلْ نَلْعَبُ كُرَةَ القدم الآنَ؟ | இப்போது காற்பந்து விளையாடுவோமா? |
| أَحْمَدُ: نَلْعَبُ غَدًا، إِنْ شَاءَ الله | இன்ஷா அல்லாஹ் நாளை விளையாடுவோம். |
| عُمَر: هَلْ نُرَاجِعُ دُرُوْسَنَا اليوم؟ | இன்று நாம் எமது பாடங்களை மீட்டுவோமா? |
| أَحْمَدُ: نُرَاجِعُ غَدًا، إِنْ شَاءَ الله | இன்ஷா அல்லாஹ் நாளை மீட்டுவோம். |
| عُمَر: هَلْ نَذْهَبُ فِي رِحْلَةٍ إِلَى شَاطِئِ البَحْرِ الآنَ؟ | இப்போது கடற்கரைக்கு சுற்றுலா செல்வோமா? |
| أَحْمَدُ: نَذْهَبُ غَدًا، إِنْ شَاءَ الله | இன்ஷா அல்லாஹ் நாளை செல்வோம். |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித பாட சொற்கள் — الأَسْماءُ فِيْ الرِّيَاضِيَّاتِ


| | | |
|---|---|---|
| 12 + 4 = 16 | கூட்டல் | جَمْعٌ |
| 12 4 = 8 | கழித்தல் | طَرْحٌ |
| 12 × 4 = 48 | பெருக்கல் | ضَرْبٌ |
| 12 ÷ 3 = 4 | பிரித்தல்/வகுத்தல் | تَقْسِيمٌ |


வட்டம் — دَائِرَةٌ


சதுரம் — مُرَبَّعٌ



முக்கோணம் — مُثَلَّثٌ



செவ்வகம் — مُسْتَطِيْلٌ


சதுரமுகி — مُكَعَّبٌ



கூம்பு — مَخْرُوطٌ


உருளை — أُسْطَوَانَةٌ


கூம்பகம் — هَرَمٌ


கோளவடிவம் — كُرَوِيٌّ


பரிதி (வட்டத்தின் சுற்றளவு) — مُحِيْطٌ


விட்டம் / நான் — قُطْرٌ



ஆரை (விட்டத்தின் அரைவாசி) — نِصْفُ قُطْرِ الدَّائِرَةِ

நேர்கோடு — خَطٌّ مُسْتَقِيْمٌ

வளைகோடு — خَطٌّ مُنْحَنًى

செங்குத்தான் — مُتَعَامِدٌ

சமாந்தரமான இருகோடுகள் — خَطَّانِ مُتَوَازِيَانِ


கோணம் — زَاوِيَةٌ

## இணைக்குக


سَمَّاعَةُ التِّلِيفُوْنِ
Stethoscope


الْكُرَةُ الْأَرْضِيَّةُ
Globe


سَمَّاعَةٌ طِبِّيَّةٌ
Telephone Receiver


خُرْطُوْمٌ
Elephant Hose



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan


## Assalamu alaikum dear friends,



In this issue let me bring a scenario in front of your eyes. Just imagine, a CCTV camera is fixed in front of you. The camera is in full operation and you stand directly under observation. In such a context, how would you react? How would your behaviors be like? Will you act rude? Or will you be so nice with everyone?

These are the few questions we are supposed to answer ourselves with regards to the above mentioned scenario.

What was mentioned above is an imaginative scenario. This is what most of our view points are, isn't it? Yet, the truth is that, we are under direct observation. An observation which is much precise and subtle than a CCTV camera. You all know of what am I talking about, right? Yes, you, I and all of us are under the direct observation of Allah (sbwt). This is in fact not something new for us. We all knew it since our childhood. Yet, the truth is that, we do not pay much attention to this concept. We are not conscious of it all the time.



Perhaps, we may be thoughtful about this in our prayers, but the bell does not ring during the other times of our lives as well.

Every single thing we do and say are observed, recorded and measured. This is the truth. Let's instill this hard on to our minds so that whenever we are to do something disgusting, let our minds themselves remind us of the fact.

Since, we revised some of our old knowledge, now let us look into the set of vocabulary mentioned in the above passage.

- Scenario – A scene
- Rude – To act harsh
- Precise – Accurate
- Subtle – Well looked
- Conscious – Aware
- Instill – Attach or fix
- Disgusting – Not nice



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

Narrated 'Abdullah bin 'Amr (Radi-Allahu 'anhu):A man asked the Prophet (Sallallahu 'Alaihi Wa Sallam), "What sort of deedsor (what qualities of) Islam are good?" The Prophet (Sallallahu 'Alaihi WaSallam) replied, 'To feed (the poor) and greet those whom you know andthose whom you do not Know.

**Bukhari Vol. 1 : No. 11 and No. 27**

# *Laugh* a while:



**Patient:** THE MEDICINE PRESCRIBED BY YOU IS NOT AVAILABLE IN ANY SHOP, DOCTOR.

**Doctor:** OH! I AM SORRY. THAT'S MY SIGNATURE.

**Patient:** !!!



## Your Corner

# My village

My village is Pelenda. It is beautiful. There is a river in my village. There are two Masjids in my village. All kinds of ethnic groups; Sinhalese, Muslims and Tamils live in my village. My village has a Sinhala Muslim school. There many shops, temples and hotels in my village. Furthermore, there are places like, tea estates, fruit and flower gardens and vegetable gardens in my village. There are lots of vehicles in my village. My village is small in size. I like to live in my village. So, I would never leave my village, Inshaa Allah

M.F. Najedha
Grade 11
WP/MT. Palenda M.V.

# The country Child

My home is a house
Near a wood,
I'd live in a street
If I could,
The lanes are so quiet,
Oh dear!
I do wish that someone lived near

There is no one to play
The trees are so high and tall,
And I should be lonely.
For hours
Were it not for me birds

And the flowers
I wish that I lived,
In a town
To see all the trains
Going down

A twinkling street
That is bright
With wonderful colours
All night





Mohamed Arkam
N/Thalawakella Tamil M.V.
Thalawakella



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Keen interest in learning

Long ago there lived a great Islamic scholar. He was known as Imam Malik (Rah). Imam Malik taught lessons from the Qur'an and Hadith in Madeena. Students from distant and nearby places arrived, in order to learn from him. One his students named Yahya,came all the way from Spain to Madeena to acquire Islamic knowledge from him.

One day when Imam Malik was giving lessons, a crowd passed by shouting "an elephant, an elephant". Since elephants were rare in Arabia, Imam Malik's entire pupil rushed out of the classroom in their curiosity to see the elephant. However, Yahya did not move from his place. On Imam Malik's inquiring for the reason, Yahya replied "Respected teacher, I've come from such a distant land not to see an elephant, but to learn from you and stay in your company to gain knowledge". The Imam was pleased with his reply. He said "You are a very intelligent boy".

Imam Malik said these words with such sincere affection that Allah in his mercy made Yahya a great and highly intelligent scholar of Spain.

✍ **Nishadha Jaamin**
**2nd Year.**
**P/ Islahiyya Ladies Arabic College,**
**Puttalam.**

## Tips to boost up your personality

- Don't overdo. Keep your limits.
- Dream more while you are awake
- Life is too short to waste time in hating anyone. Don't hate others.
- Make peace with your past, so it won't spoil your present.
- Smile and laugh more.
- You don't have to win every argument. Agree to disagree

✍ **M.F.F. Fazmina**
**No: 65**
**Kandy road, welamboda.**

## The 5 sayings of Dr. Abdul Kalam



1. I am the best.
2. I can do it.
3. Today is my day
4. I am the winner.
5. God is always with me.

So, keep it in your mind, always!!!

✍ **Safiya Zarook**
**1st year (2016)**
**Al-Mu'minath G.A.C., Kurugoda, Akurana**

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

**I learn every day**

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் ஜீனியஸ்?

1. உலகில் எத்தனை வகையான மின்மினி பூச்சிக்கள் இருக்கின்றன?
2. மின்மினி எதற்காக விட்டு விட்டு ஒளிர்கின்றது?
3. மருதானை ஸாஹிரை கல்லூரி எப்போது உருவாக்கப்பட்டது?
4. அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க முன் வந்த மக்கா பிரமுகர் யார்?
5. நோபல் பரிசு எப்போது உருவாக்கப்பட்டது?
6. பனாமா கால்வாய் எப்போது திறந்து வைக்கப்பட்டது?
7. ஸாலிஹ் நபிக்கு கிடைத்த அல்லாஹ்வின் அத்தாட்சி எது?
8. ஒரு மணிநேர விளையாட்டில் ஒருவரின் இயல்பை அறிந்து கொள்ளலாம் என்று கூறிய அறிஞர் யார்?
9. முஸ்லிம் சமூகத்தின் முதலாவது வார இதழ் எது?
10. மின்மினியின் ஒளியை குளிர் வெளிச்சம் என அழைக்க காரணம் என்ன?

## போட்டியின் நிபந்தனைகள்

01. தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான புத்தக பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.
02. சரியான விடையை தபால் அட்டையில் மாத்திரம் எழுத வேண்டும்.
03. விடைகளை அனுப்பவேண்டிய முகவரி

**அகரம் இதழ்**
No 77, Sri Vajiragnana mw
Colombo-09

04. போட்டி முடிவுத்திகதி 20.11.2017




PUBLIC LIBRARY

**அறிவுக் களஞ்சியம்...**
**13 ஆம் பக்கத் தொடர்... விடைகள் (இஸ்லாம்)**

1. 10,000
2. அடிபணிதல் / பிரார்த்தித்தல்
3. ரோம் (அர்ரும்)
4. அப்துல்லாஹ்
5. 1/3 பங்கு
6. ஹாரூன் அல்ரஷீதின் காலமாகும்.
7. 11 ஆம் ஆண்டில்
8. யெஹ்யாபின் காலித் பர்மகி
9. அப்துர்றஹ்மான் இப்னு முல்ஜிம்
10. 27
11. ஹிஜ்ரி 8 இல்
12. அஸ்லம் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்

**பொது அறிவு**

1. 1931
2. 2 ஆம் புவனேகபாகு
3. நியூசைனா ஏஜென்ஸி
4. அயர்லாந்து
5. 1950
6. கியூபா
7. உருக்குத் தொழிற்சாலை

## எண்ணங்களின் வண்ணங்கள் - 24

**தலைப்பு: மரம் நடுவோம்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 நவம்பர் 20**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவதுடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலமைப்பரிசில் பரீட்சை - 2017
# சாதனை படைத்த மாணவர்கள்

## குரு/இப்/அல்அஷ்ரக் மு.ம.வி, தல்கஸ்பிடிய


எம்.எச். அப்துல்லாஹ்
180


எம்.ஏ. தமீமி
162


எம்.எஸ். அப்துல்லாஹ்
162


எம்.எப். பஸ்லத்
160


ஏ.பீ. ஸைனப்
158

## க/அல்ஹிக்மா வித்தியாலயம், தெல்தோட்டை


எம்.என்.எப். சஸ்மிரா
177


எம்.ஆர்.எம். அகீல்
165


எம்.எப்.எம். பர்ஹான்
165


வை.எம். உஸாமா
161



எம்.இஸட். ஸைத்
157

## மே/களு/ நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி, பேருவளை


எப். இமாரா
172


எப். நஹ்லா
165


எப். ருஸைகா
157


எப். ஸப்னம்
156


ஆயிஷா தஹ்ஸின்
156

## குரு/இப்/தெலம்புகல்ல மு.ம.வி, தொடங்கஸ்லந்த


அகீலா பேகம்
183


என்.எப். ஹுதா
168


என்.எப். நுஹா
166


எம்.எம். நகீப்
161

## பு/கற்/கொய்யவாடி முஸ்லிம் ம.வி.


எப்.எப். ரிபா
161



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சப்/பாபுல் ஹஸன் மத்திய கல்லூரி, வரகாப்பொல




எம்.ஆர்.எம். ஸீசான்
167



பீ.இஸட்.எப். சரீஹா
166



எம்.எச்.ஏ. ஹாசின்
அஹமட் - 165




எப்.எப்.எப். பஹ்மா
164



எம்.டீ.எப். சுக்றா
162



ஏ.ஜே.எம். அகீல்
161



எஸ்.எப். ஸம்லா
161



ஐ.எப். அஜ்பா
158



எம்.என். ஷைமா
158



எம்.என்.எப். சுமையா
158

## மே/கொ/அல்ஹிக்மா கல்லூரி, கொழும்பு - 12



எம்.டீ.எம். ஹாஜரா
179



என். ஸைப் அஹமட்
178



எஸ். முஹம்மத்
177



எம்.எச்.எம். அதீபா
177



எம்.டீ. அர்கம்
176



எம்.ஏ.ஆர். அஸ்மத்
இலாஹி - 162

## மு/தண்ணீரூற்று மு.ம.வி. முல்லைத்தீவு



ஆர்.எப். ரிபா
164



ஏ.எப். அப்லா
156



என். பர்னஸ் பானு
156

## கொ/முஸ்லிம் ம.க, பம்பலபிட்டி



அம்னா ரிஸ்மி அஹமட்
169

## கு/இப்/அந்நூர் மத்திய கல்லூரி, பானகமுவ



ஏ. பாத்திமா
167



எம்.எம்.எப். அஸ்கா
160



எம்.ஐ.எப். ரைஹானா
158

## கனுல்வெல முஸ்லிம் ம.வி,



எம்.என்.எம். ஹம்தான்
168



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# விதிகள் மாறலாம்

சுஜாதா சாரா மின்ஹாஜ
(ஹரியா வளாகம)

செங்கதிரவன் தன் இளஞ்சுடர்களை பரவ விட்ட, அந்த அமைதியான காலைப் பொழுதில் மல்லிகை மரங்களைத் தாண்டி சுகமான குளிர் சுமந்த காற்று மேனியை வருடிச் செல்லும். காக்கா கூட்டங்கள் அன்றைய நாளின் ஆரம்பத்தை கூட்டமாக கரைந்து அறிவித்தது. எமது பாடசாலை அன்றைய விடியலில் பரபரப்பாக சுழன்றது. மாணவர்கள் வியர்வை சொட்டச் சொட்ட களைப்பு பாராது வளாகத்தை சுத்தம் செய்ய, தலைமை ஆசிரியர் அடிக்கடி நேர்த்தியை நோட்டமிட்டார். வாத்திய குழு உச்சஸ்தாயியில் தனது ஆற்றலைக் காண்பிக்க போராடிக் கொண்டிருந்தது.

ஒத்திகைகளை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த ஆசிரியர்கள் அடிக்கடி முகத்தைச் சுழிப்பதும் பின்னர் மாணவர்களை அணுகி ஆலோசனை கூறுவதுமாக நேரம் கழிந்து கொண்டிருந்தது.

கடிகார முள் காலை ஒன்பதைக் காட்டவே பாடசாலை வளாகம் செய்து வைத்ததுபோல இரம்யமாக மாறி விட்டிருந்தது. தமது பாடசாலைக்கு வரப்போகின்ற அந்த மாமனிதரைக் காண அனைவரும் அக மகிழ்வுடன் தயாராகினர். ஆசிரியர்கள் சிலர் ''யாரப்பா இது? என்ன செய்திட்டாராம்?'' என முணுமுணுத்துக் கொண்டது என் காதிலும் விழுந்தது.

நான் மட்டும் அமைதியான ஆன்மாவுடன் ஆலமரத்தடியின் கீழ் நின்று அந்த அதிதியை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். இதேபோன்றுதான் பாடசாலை நாட்களில் நானும் அவனும் எத்தனையோ நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று உரையாடியிருப்போம்.

கறுப்புக்கு பெயர்போன அவன் நீலம் போட்டு கருநீலமாக மாறிவிட்டிருந்த பாட சாலை சீருடையுடன் என் கரங்கள் பிடித்து விளையாடியதையும், துக்கம் தொண்டையை அடைக்கும் தருணத்தில் என் தோளில் சாய்ந்து அழுது தீர்த்ததையும் நினைக்கும்போது என் கண்கள் குளமாகின்றன.

அழகிய புன்முறுவலுடன் ஆழ்மனம் முழுக்க செந்தமிழ் புலமையுடன் சகலகலா வல்லவன் அவன். காலங்கள் யதார்த்தத்தை புரிந்தாலும் சில மனிதர்கள் யதார்த்தத்தை புரிவதில்லை என்பதற்கு எனது பள்ளிக்கூடமும் சிறந்த சாட்சி. கணித பாடவேளை அவனுக்கு கசப்பானது. விஞ்ஞானம் அவனது எதிரியானது. ஆங்கிலம் அந்நியமானது. ஆனால், தமிழ் மொழியில் மாத்திரம் தன்னிகரற்று தலைநிமிர்ந்து நடந்தான்.

தமிழ் தின போட்டிகளுக்கு அவனுக்கு இறுதிவரை சந்தர்ப்பம் கிடைக்கவேயில்லை. மற்ற பாடங்களில் அவன் பொடுபொக்காக இருந்து விட்டதால் அவன் தமிழிலும் மக்காத்தான் இருப்பான் என்று நினைத்து விட்டார்கள். ஆனால், அவன் குளக்கரையில் பாடும் கீதங்களுக்கும் வயல் வரம்புகளில் பேசும் வீரப்பேச்சுக்களுக்கும் முதல் ரசிகனாக இருந்த எனக்கா அவன் ஆற்றல் தெரியாது!

''சேர் உங்களை அதிபர் அழைக்கின்றார்'' என்றவுடன் சுயநினைவுக்கு வந்தேன். ''அரம்பதி எங்க போனீங்க? உங்களைத் தேடி நான் எத்தனை பேரை அனுப்பிவிட்டேன்.''

அதிபர் பேசிக் கொண்டிருக்கும்போதே ஆரவாரம் கேட்டது. வெளியே வந்து பார்க்க அவன் வந்து கொண்டிருந்தான். இல்லையில்லை அவர் வந்து கொண்டிருந்தார்.

யாருமே அவர் இந்த நிலைக்கு வருவார் என்று சற்றும் கற்பனை கூட செய்திருக்கவில்லை. ஆனாலும், தன் விடா முயற்சியினால் இந்த மேன்மை நிலைக்கு தன்னை உயர்த்தியிருந்தார்.

அரங்கத்தில் அவர் என்னை நோக்கி வந்தார். எங்கே பாடசாலைக்கு ஏசிவிடப் போகின்றாரோ என என் மனம் படபடத்தது. ஆனால், அவர் என் கைகளை இறுக்கமாக பற்றியிருந்த லாவகம், இல்லையில்லை அவன் இன்னும் அதே என் தோழன்தான். என்ன நடந்தாலும் எதையும் மனதில் வைத்துக் கொள்ளாத என் நண்பன்தான் என்பதை பறைசாற்றியது.

என் கைகளை இறுக்கமாக பற்றியபடி அவன் சொன்னான்.

''என்னதான் வாழ்வில் கசப்பான விடயங்கள் நடந்திருந்தாலும் இது எனது பாடசாலை. நான் நல்ல நிலைக்கு வந்த பின்னர் எனது பாடசாலையை மறக்க மாட்டேன். இனி இந்தப் பாடசாலையை அபிவிருத்தி செய்வதே எனது ஒற்றை இலக்கு'' அவன் பேசப்பேச எனக்கு ஆன்மா குளிர்ந்தது.

தான் அனுபவித்த வலிகளை இந்த உலகில் யாரும் அனுபவிக்கக் கூடாது என்பதே உன்னத மனிதமாகும்.

அதன் பின் தன் வார்த்தைகளைக் காப்பாற்றும் விதமாக அவன் தொழிற்பட்டான். திறமையான மாணவர்களை இனங்கண்டு அவர்களின் திறமைகளை வளர்க்க அயராது பாடுபட்டான். தனது திறமைகள் இலைமறை காயாகவே அழிந்தது போல... இங்கு இனி யாருடைய திறமைகளும் வீணாகக் கூடாது என்று அயராது பாடுபட்டான்.

அவன் கனவு வீணாகவில்லை. இப்போது எங்கள் மாணவர்கள் பாடநூல்களில் மூழ்கியிருக்கவில்லை. அவர்களின் வரலாறே ஒரு பாடமாக போதிக்கப்படும் அளவு வளர்ந்திருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இயற்கையின் இரகசியம் மூலம் இன்னுமொரு சாதனை...

✍ வ. முஹம்மத் நபீல்



இலங்கை புத்தாக்குநர் கழகத்தின் ஏற்பாட்டில் செப்டெம்பர் 28, 29, 30 ஆகிய தினங்களில் நடைபெற்ற கண்டுபிடிப்புக்களின் கண்காட்சிக் கூடத்தில் நாம் உலா வந்து கொண்டிருந்த சமயம் அது. சாதனையாளர்களை ஊக்குவிப்பதை தனது முக்கிய இலக்காக, கொண்டிருக்கும் அகரம் சிறுவர்களுக்கான அறிவியல் இதழின் சார்பில் அங்கே வருகை தந்திருந்த முன்னூற்றுக்கும் மேற்பட்ட சாதனையாளர்களைக் கண்டு கைகுலுக்கி பாராட்டினோம்.

அப்போதுதான் பாத்திமா பர்ஸானா என்ற மாணவியை சந்தித்தோம். கிண்ணியா குறிஞ்ஞாக்கேணி பகுதியைச் சேர்ந்த இவர், தனது இயற்கை மூலிகை விஞ்ஞானக் கண்டுபிடிப்புடன் வந்திருந்தார். படிப்படியாக இயற்கை மருத்துவம் அழிந்து கொண்டிருக்கும் இத்தருணத்தில், பர்ஸானா அதே இயற்கை மூலிகைகளைப் பயன்படுத்தி குறிப்பிட்ட மருந்தைக் கண்டுபிடித்திருப்பது உண்மையில் மிகப் பெரிய சாதனைதான்.

**அகரம்**: முதலில் வாழ்த்துக்கள். உங்களைப் பற்றிய அறிமுகமொன்றைத் தர முடியுமா?

**பாத்திமா பர்ஸானா**: எனது தந்தை முஹம்மத் ஸகரிய்யா கடற்தொழில் செய்கின்றார். தாய் பாத்திமா வீட்டு நிர்வாகத்தையும் குழந்தை வளர்ப்பையும் கவனித்துக் கொள்கின்றார். நாங்கள் மொத்தமாக ஒன்பது குழந்தைகள். அதில் நான் க.பொ.த உயர் தரத்தில் கற்றுக் கொண்டிருக்கின்றேன்.

ஆரம்பம் முதல் உயர்தரம் வரை தி/குறிஞ்ஞாக்கேணி பாடசாலையில் கற்று வருகின்றேன். எனது கல்வி வாழ்வில் நடந்த முக்கியமான ஒரு விடயத்தையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். சாபிரா ஆசிரியை எனக்கு கிடைத்த ஓர் அற்புத ஆசிரியையாவர். சாபிக் ஆசிரியரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

ஏழ்மை எனும் தடைக்கற்களைத் தாண்டி எப்படி எம் கனவுகளை அடைய வேண்டும் என்பதைக் கற்றுத் தந்தார்.

**அகரம்**: உங்கள் கண்டுபிடிப்பு பற்றி அறிமுகமொன்றை வழங்க முடியுமா?

**பாத்திமா பர்ஸானா**: இந்த மருந்து எனக்காக நானே கண்டுபிடித்த ஒன்று என்பதை முதலில் கூறிக்கொள்ள வேண்டும்.

வாழ்வில் நமக்கு வரும் சில இக்கட்டான சந்தர்ப்பங்களும் சிக்க ல்களும் நமக்கு பயனுள்ள ஒரு விடயத்தை மறைத்து வைத்திருப்பதை நாம் உணர்வதே இல்லை. சோதனைகளுக்குள்ளும் வேதனைகளுக்குள்ளும்தான் எமது சாதனைக்கான போதனைகள் மறைந்திருக்கின்றன. அதேபோல, எனக்கு வந்த ஒரு நோயின் தாக்கத்தினால் பீடிக்கப்பட்டிருந்த நான், எனக்கு செய்த மருத்துவத்தின் மூலமாகத்தான் இந்த மருந்தைக் கண்டுபிடிக்க முடியுமாக இருந்தது.

எட்டு வயதில் எனக்கு ஏற்பட்ட ஒரு வகை தோல் நோய் மிகவும் பாதிப்பாக அமைந்தது. அதற்கு ஆங்கில மருத்துவத்தைப் பயன்படுத்தியபோதும் என்னால் எவ்வித மாற்றத்தையும் காண முடியவில்லை. அதேநேரம், நான் கற்ற மருத்துவ குறிப்புக்களின் உதவியால் இந்த மருந்தைக் கண்டுபிடித்தேன். அதாவது, கருவேப்பிலை, மஞ்சள், உப்பு போன்ற மிகவும் எளிதாக கிடைக்கக்கூடிய பொருட்களைப் பயன்படுத்தியே இந்த இயற்கை மருந்தைக் கண்டுபிடித்துள்ளேன். எவ்வித பக்கவிளைவும் அற்றது என்றும் தோல்நோய்களுக்கு சிறந்த மருந்து என்றும் மருத்துவர்கள் தந்த தரச்சான்றிதழ் எனக்கு மிகப் பெரும் உந்து சக்தியாக அமைகின்றது.

நம்மைச் சூழ என்னற்ற கண்டுபிடிப்புக்கள் மறைந்திருக்கின்றன. அவற்றை வெளிக்கொண்டு வருவதே மாபெரும் சாதனைதான். ஆழமான தேடலும் புத்தாக்கமுடைய பார்வையும் விடாமுயற்சியும் இருந்தால் எவரும் கண்டுபிடிப்பாளராக வரலாம்.

**அகரம்**: இந்தக் கண்டுபிடிப்பில் உங்களுக்கு உதவியர்கள் யார்?

**பாத்திமா பர்ஸானா**: எனது பெற்றோர் உட்பட, சகோதர சகோதரிகள் என அனைவரும் இக்கண்டு பிடிப்புக்கு உதவியாக இருந்தனர். முக்கியமாக பாடச ாலையில் கூட எனது அதிபர் நஜீம் உட்பட ஆசிரிய குழாத்தில் வீற்றிருக்கும் பாயிஷா, சாகி, பெரோஸ், சாமினா, சக்கீனா, இக்பால், சானுஸ், பைரோஸா, சாபர், றியாஸ்... என அனைவருக்கும் நான் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

அதே நேரத்தில், இதே துறையில் இயற்கை மூலிகையைக் கண்டுபிடித்து சாதித்திருக்கும் சகோதரர் ஸகி லதீப் அவர்களை முன்னோடியாகக் கொண்டு எனது சாதனைப் பயணத்தைத் தொடர்ந்திருக்கின்றேன்.

அதேபோன்று, இக்களத்தை அமைத்து தந்திருக்கும் இலங்கை புத்தாக்குநர் கழகத்திற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும். நன்றி சொல்ல வார்த்தையற்று ஒட்டுமொத்த புகழுக்கும் உரியவன் அல்லாஹ். அவனின் அருளை இப்போது ஆழ்மனம் முழுக்க பேரானந்தத்துடன் நினைவுகூர்கின்றேன்.

**அகரம்**: உங்களைப்போன்று சாதிக்கத் துடிக்கும் மாணவ, மாணவிகளுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பாத்திமா பர்ஸானா**: சாதிக்க விரும்புபவர்கள் தமது இலட்சியத்தை வெறும் ஆசையாக வைத்திருக்கக் கூடாது. அவர்களது தூக்கத்திலும் விழிப்பிலும் வேளைப்பளுவிலும் ஓய்விலும் அவர்களை விடாமல் துரத்தும் ஒரு விடயமாக அவர்களது கனவு இருக்க வேண்டும். அப்துல் கலாம் அவர்கள், ''தூக்கத்தில் காண்பதல்ல கனவு, தூங்க விடாமல் உன்னை துடித்தெழுந்து போராடச் செய்வதே எமது கனவு'' எனக் கூறியதை இப்போது நினைவுகூர்கின்றேன்.

அதேபோல கனாக் காணுங்கள்; அதை அடையும் வரை முயற்சி செய்யுங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரீட்சையை எதிர்கொள்வது எவ்வாறு?

***ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)***
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

நீண்டகாலமாக எதிர்பார்த்துக்காத்திருந்த க.பொ.த. (ச.த.) பரீட்சை இன்னும் சொற்ப காலத்தில் எம்மை வந்தடையவிருக்கிறது. இக்கால கட்டத்தில் மாணவர்களாகிய ஒவ்வொருவரும் தாம் எதிர்கொள்ளவிருக்கும் அப்பரீட்சையில், அதிகூடிய புள்ளிகளைப் பொற்று சித்திபெற அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இக்கட்டுரையை நீங்கள் வாசிக்கும் தருணம் பரீட்சைக்கு பெருமளவு தயாராக இருப்பீர்களென நம்புகிறேன். இச்சந்தர்ப்பத்தில் மாணவர்கள் கைக்கொள்ள வேண்டிய சில முக்கிய அம்சங்களை இங்கு அவதானிப்போம்.

1. கற்பதற்கான சிறந்த சூழலைத் தெரிவு செய்தல்.

வழமைபோல் பாடங்களை மீட்டுவதற்கும் குறிப்புகளைப் எடுப்பதற்கும் சந்தடிகள் அற்ற, பிறரின் தொல்லைகள் இல்லாத, காற்றோட்டமும் போதிய வெளிச்சமும் கொண்ட உங்களுக்குச் சௌகரியமான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி, பேஸ் புக், வட்ஸ் அப், சக நண்பர்களுடனான வீண் அரட்டை, இரவில் சுற்றித் திரிதல் மற்றும் பண்பாடற்ற இன்னோரன்ன விடயங்களிலிருந்து முற்றாகத் தவிர்ந்திருங்கள். படிக்க ஆரம்பிக்க முன்னர் வழமைபோல் அல்குர்ஆன் ஓதுவதற்கு மறந்து விடாதீர்கள். இரண்டு ரகஆத்துக்கள் தொழுது, அல்லாஹ்விடம் துஆப் பிரார்த்தனை செய்து, படிக்க ஆரம்பியுங்கள்.

2. மீட்டல்

பரீட்சைக்குத் தயாராக வேண்டிய பாடங்களை எவ்வாறு மீட்டிக் கொள்ளலாம் என ஒரு திட்டத்தை வகுத்துச் செயற்படுங்கள். ஒவ்வொரு நாளும் நடுத்தர வேகத்தில் உங்களுடைய பாடங்களை மீட்டிக் கொள்ளுங்கள். ஒவ்வொரு 50 நிமிடங்களுக்கொருமுறை 5 அல்லது 10 நிமிடங்கள் ஒய்வெடுத்துக் கொள்ளுங்கள். இந்த ஓய்வு நேரத்தில் சிறியதொரு நடைபோடுவதோடு போதுமானளவு நீரருந்துங்கள்.

ஒவ்வொரு பாடத்திலும் மீட்ட வேண்டிய தலைப்புகளையும் சிறுதலைப்புகளையும் தனியாக எழுதிக் கொள்ளுங்கள். மீட்டப்பட்ட தலைப்புகளை அடையாளமிட்டுக் கொள்ளுங்கள். கடந்தகால வினாக்களில் நன்கு பரிச்சயம் பெற்றிருக்கும். இச்சந்தர்ப்பத்தில் இம்முறை எதிர்பார்க்கும் வினாக்கள் எப்படி வரக்கூடும் என்பதையும் யூகித்திருப்பீர்களென நம்புகிறேன். இப்போது மாதிரி வினாக்களை உருவாக்கி அவற்றைச் செய்து பாருங்கள்.

3. ஒரு நேரத்தில் ஒரு பாடத்தில் மாத்திரம் கவனம் செலுத்தல்.

பாடங்களை மீட்டல் செய்கின்றபோது ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களில் கவனம் செலுத்தக்கூடிய சில மாணவர்களும் இருக்கின்றனர். ஒரு பாடத்தை மீட்டும்போது வேறு ஒரு பாடத்தில் இருக்கின்ற ஒரு விடயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபகத்திற்கு வருமாயின் அதைப் படிக்க முயற்சிப்பர். இது முற்றிலும் தவறான அம்சமாகும். இதைத் தவிர்த்து குறித்த ஒரு நேரத்தில் குறித்த ஒரு பாடத்தில் மாத்திரம் கவனம் செலுத்துவதே சாலப் பொருத்தமானது.

4. மீட்டல் உத்திகளைப் பயன்படுத்தல்.

பாடங்களை மீட்டிக் கொள்வதற்கென பல உத்திகள் காணப்படுகின்றன.

**பின்வரும் விடயங்களை உதாரணமாகச் சொல்லாம்:**




- Flow Chart.
- Mind Mapping
- Bookmark
- Mnemonic

இப்படம் **Flow Chart** ஒன்றை எவ்வாறு வரைவது என்பதைக் காட்டி நிற்கிறது.

இது போல் **Book marker** ஒன்றில் தேவையான தகவல்களை எழுதி அடிக்கடி வாசிக்கும் புத்தகத்தினுள் வைக்கலாம். புத்தகத்தை விரிக்கும்போதெல்லாம் அந்த **Book marker** உள்ள தகவல்கள், குறிப்புகள் என்பன அடிக்கடி மீட்டப்படக் கூடியனவாக இருக்கும். இதுபோலவே ஏனைய உத்திகளையும் பயன்படுத்தலாம்.



**காட்சிப்படுத்தல்கள் மூலம் மீட்டுவதற்கான சில உதாரணங்கள்**

- வரைபடங்கள்
- போஸ்டர்கள்
- அட்டவணைகள்
- சுருக்கக் குறிப்புகள்
- **Pictures**
- **Mind map** போன்றவற்றை படிக்கும் அறையில் தொங்கவிடலாம். இன்னும் குருதிச்சுற்றோட்டத் தொகுதி, தோலின் அமைப்பு, காதின் அமைப்பு என்பவற்றின் படங்கள் இன்று கடைகளிலில் வாங்கக் கிடைப்பதால் அவற்றை வாங்கி அறைகளில் தொங்க விடலாம்.

**செவிமடுப்பதன் மூலம் மீட்டுவதற்கான சில உதாரணங்கள்:**

- முக்கியமான விடயங்களை ஒலிப்பதிவு செய்து கேளுங்கள்.
- ஒரு விடயத்தில் வரக்கூடிய முக்கிய சொற்களை **(Keywords)** சப்தமிட்டுச் சொல்லல்.
- பிறருக்குக் கற்றுக் கொடுத்தல்.
- பிறரிடம் வினாக்களைக் கேட்குமாறு கூறி அதற்கு விடையளித்தல்.
- உங்களுடைய கருத்துக்களை உற்ற நண்பர்களுடன் பரிமாறிக் கொள்ளுங்கள்.

5. பரீட்சை வினாக்களை உரிய நேரத்தில் செய்து முடிப்பதற்கான பயிற்சியைப் பெறல்.

கடந்த கால வினாக்களைச் செய்து பார்க்கும் போதும் சரி, மாதிரி வினாக்களைச் செய்து பார்க்கும்போதும் சரி அவற்றை உரிய நேரத்திற்குள் செய்து முடிப்பதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொள்ளுங்கள். இரண்டு மணித்தியால வினாப் பத்திரம் ஒன்றைச் செய்து பார்க்கப்போகிறீர்கள் என வைத்துக் கொள்வோம். முதலில் ஒரு கடிகாரத்தைப் பார்த்து நேரத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். பின்னர் அவ்வினாப்பத்திரத்தை சொல்லப்பட்ட நேரத்தினுள் செய்து முடிக்க முயற்சியுங்கள்.

**பரீட்சைக்கு இன்னுமொரு வாரம்தான் இருக்கின்றது, என்ன செய்யலாம்?**

1. இப்போது ஒவ்வொரு பாடத்திலும் நீங்கள் எடுத்த குறுங்குறிப்புகள் **(short notes)** உங்களுடைய கையிலிருக்கும். ஒரு நாளைக்கு ஒரு பாடம் என்றபடி முக்கியமான மீட்ட வேண்டிய பாடங்களை திரும்பவும் மீட்டிக் கொள்ளுங்கள். ஏனைய பாடங்களை ஒரு நாளைக்கு இரு பாடங்கள் என்றபடி மீட்டிக் கொள்ளலாம்.

3. பரீட்சை மிகநெருங்கிய நிலையில் சக நண்பர்களுடன் சேர்ந்து கலந்துரையாடுவதைத் தவிர்ந்து கொள்ளுங்கள். இதனால், மன உழைச்சல் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுகின்றன.

4. உங்களுடைய அனுமதி அட்டையை **(Admission Card)** பாடசாலை அதிபரிடம் கொடுத்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அதில் உங்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடைய பெயர், முகவரி அனைத்தும் சரியாக உள்ளதா என்பதை நன்கு அவதானித்து பிழை ஏதும் இருந்தால் திருத்திக் கொள்ளுங்கள்.

5. பரீட்சைக்கு ஓரிரு தினங்களுக்கு முன் தாம் பரீட்சை எழுதவிருக்கும் பாடசாலை, அங்குள்ள பரீட்சை மண்டபங்கள், அவற்றில், **'A' Hall** எது **'B' Hall** எது என்ற விடயங்களை அறிந்து வைத்திருங்கள். இது பரீட்சை நடைபெறும் முதல் நாளில் ஏற்படக்கூடிய சில வீணான பிரச்சினைகளைத் தவிர்க்க பேருதவியாக அமையும்.

**பரீட்சைக்கு முதல் நாள்?**

1. பரீட்சை நேர அட்டவணையை நன்கு அவதானித்து பரீட்சை ஆரம்பிக்கும் நேரம், உங்களுடைய மண்டபம் மற்றும் உங்களுடைய சுட்டெண் என்பவற்றோடு நன்கு பரீச்சயமாகிக் கொள்ளுங்கள்.
2. நேர காலத்தோடு பரீட்சை எழுதத் தேவையான பென்சில், பேனை, அழிப்பான், **Compass Box** மற்றும் தேவையான அனைத்துக் கருவிகளையும் ஆயத்தப்படுத்தி வையுங்கள். கூடவே தேசிய அடையாள அட்டை அல்லது தபால் அடையாள அட்டை மற்றும் **Admission Card** என்பவற்றையும் தயார்படுத்தி வையுங்கள். நாளை பரீட்சை மண்டபத்திற்கு அணிந்து செல்வதற்கான ஆடையையும் ஏலவே ஒழுங்கு செய்து வைத்து விடுங்கள்.
3. அடுத்த நாளைக்குரிய பாடத்தை இறுதியாக ஒரு தடவை மீட்டி விட்டு இரவுத் தூக்கத்திற்காக நேரகாலத்தோடு படுக்கைக்குச் செல்லுங்கள். தூங்க முன் ஒரு கிளாஸ் தண்ணீர் அருந்துங்கள். அது உங்களுடைய மூளையை உயிரோட்டமுள்ளதாக வைத்திருக்க உதவுகிறது.

**பரீட்சை தினம்?**

1. அதிகாலையில் நேரத்தோடு துயிலெழுங்கள். காலை உணவை மறக்காமல் உட்கொள்ளுங்கள். ஆரோக்கியமான, வழமையாக உட்கொள்ளும் உணவாக இருப்பது மேலானது.
2. அழகிய முறையில் ஆடையணிந்து கொள்ளுங்கள். பரீட்சை எழுதத் தோவையான அனைத்துப் பொருட்களும் ஆவணங்களும் இருக்கின்றதா என்பதை மீண்டும் ஒருமுறை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
3. நேரகாலத்தோடு பரீட்சை நிலையத்துக்குச் செல்லுங்கள். அரை மணித்தியாலங்களுக்கு முன் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்து விடுங்கள்.
4. உங்களுடைய இடத்தில் சௌகரியமாக அமர்ந்து கொள்ளுங்கள். மேசை ஆடக்கூடியதாக இருந்தால் அதைச் சரி செய்து கொள்ளுங்கள். கதிரை உட்கார வசதியற்றது என்றால் வேறொரு கதிரையை மாற்றிக் கொள்ளுங்கள். சூரிய ஒளி மற்றும் அதிக வெப்பமுள்ள இடமாக இருந்தால் அதிகாரிகளிடம் முறையிடுங்கள்.
5. தைரியத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். நேர்மனப்பான்மையுடன் சிந்தியுங்கள் **(Positive thinking)** என்னால் முடியும். இது எனது திறமைகளைக் காட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பம். நான் சிறந்த முறையில் பரீட்சைக்குத் தயாராக இருக்கிறேன். என்று மனதில் நினைத்துக் கொள்ளுங்கள்.

**வினாத்தாள் கையில் கிடைத்ததும்**

1. வினாத்தாள் கிடைப்பதற்கு முன்பாக விடை எழுதுவதற்கான தாள்கள் கிடைத்திருக்கும். அதில் மிகக் கவனமாக உங்களுடைய சுட்டெண், பெயர், பாடத்தின் பெயர் மற்றும் கேட்கப்பட்ட விடயங்கள் அனைத்தையும் எழுதுங்கள்.
2. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை அவதானமாக வாசித்து விளங்கிக் கொள்ளுங்கள். மொத்தமாக எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.
3. எப்போதும் தெரிந்த வினாக்களுக்கு முதலில் விடையளிக்க முயற்சியுங்கள்.
4. பல்தேர்வு வினாக்களைப் பொறுத்தவரை முதலில் பிழையான விடைகளை இனங்கண்டு ஒதுக்கி விடுங்கள். எஞ்சியிருக்கும் விடையே சரியானதாகக் காணப்படும்.

அல்லாஹ்வை நம்புங்கள், உங்களை நம்புங்கள், நிச்சயம் அந்த வாழ்க்கையில் வெற்றி கிடைக்கும்.

எதிர்வரும் பரீட்சையை சிறந்த முறையில் எதிர்கொண்டு, கூடிய பெறுபேறுகளுடன் சித்தி பெற எல்லாம் வல்ல அல்லாஹ் அருள் புரிவானாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனாமா
# PANAMA

குடியரசு தலைவர்
ஹுவான் கார்லோஸ் வரேலா

மத்திய அமெரிக்காவின் தென் முனையில் அமைந்திருக்கும் நாடு பனாமா. தரைவழியாக வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும் கடைசி மத்திய அமெரிக்க நாடு இதுவாகும். மேற்கில் கோஸ்டா ரிகாவும் வடக்கில் அட்லாண்டிக் பெருங்கடலும் தெற்கில் பசிபிக் பெருங்கடலும் தென் கிழக்கில் கொலம்பியாவும் பனாமாவின் எல்லைகளாக காணப்படுகின்றன.

லத்தீன் அமெரிக்காவில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் பனாமா முதனிலை வகிக்கின்றது. வேலையற்றோர் விகிதம் 2.7% இற்கு குறைக்கப் பட்டுள்ளது. ஐந்து பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்படும் பனாமா கல்வியறிவிலும் முதன்மை வகிக்கின்றது.

நாட்டின் பெரும்பான்மையினராக அடிப்படை அமெரிக்க மக்களையும் 8 வீதம் நீக்ரோ மக்க ளையும் இன ரீதியாகக் கொண்டிருக்கும் பனாமா, மத ரீதியாக ரோமன் கத்தோலிக்கத்தைப் பின் பற்றுபவர்களை 75 சதவீதமும் 15 சதவீதம் புரட்டஸ் தாந்து மக்களையும் 2 வீதம் பஹாய் நம்பிக்கையை பின்பற்றுபவர்களையும் கொண்டிருக்கின்றது.

அறிவியல் மற்றும் விளையாட்டு முதல் அரசியல் வரைக்கும் அமெரிக்காவின் செல்வாக்கு மிக அதிகமாக தொழிற்படும் நாடாக பனாமா மாறி யுள்ளது.

| | |
|---|---|
| **தலைநகரம்** | **- பனாமா** |
| **ஆட்சி மொழி** | **- ஸ்பானியம்** |
| **அரசாங்கம்** | **- குடியரசு** |
| **துணைத்தலைவர்** | **- இஸபெல் மலோ** |
| **மக்கள் தொகை** | **- 4,608,431** |
| **நாணயம்** | **- பனாமா பல்போபா, அமெரிக்க டொலர்** |


கடல்வழி வணிகத்தை இலகுவாக்கவும் கப்பல் களின் தேவையற்ற அலைச்சலைக் குறைக்கவும் பனாமா கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கப்பல்கள் தென்அமெரிக்க கண்டத்தை முழுமையாக சுற்ற வேண்டிய தேவை இருந்தது. பதினாறாம் நூற்றாண்டில்தான் பனாமா கால்வாய் அமைக்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது. முதன் முதலாக இத்திட்டத்திற்கு தலைமை வகித்த பிரான்ஸ் 22000 பணியாளர்கள் இறந்ததைத் தொடர்ந்து இத்திட்டத்தைக் கைவிட்டது. ஆனால், அமெரிக்கா இப்பொறுப்பை 1914 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி வெற்றிகரமாக பூர்த்தி செய்தது. அமெரிக்காவின் பனியிலும் அதிகமான தொழிலாளர்கள் இறந்து போயினர்.

77 கி.மீ. நீளமும் 33.5 கி.மீ. அகலமும் கொண்ட பனாமா கால்வாயில் 2008 கணிப்பின் படி, 14702 கப்பல்கள் சென்று கொண்டிருந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்


# சொல்முறைப்படுத்தல் மென்பொருள் (Microsoft word)

**பாடம் - 19**

சொல்முறைப்படுத்தல் மென்பொருள் பற்றி நாம் ஏற்கனவே கற்றுள்ளோம். (தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் தரம் 6 புத்தகத்தில் படித்ததை நினைவில் கொள்ளுங்கள். - பாடங்கள்: 17, 18)

சொல்முறைப்படுத்தல் மென்பொருள், ஆவணங்களை உருவாக்குவதற்காகவே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. தரமான, கவர்ச்சியான, இலகுவில் புரிந்து கொள்ளத்தக்க, அதிக கொள்ளளவைக் கொண்டிராத, இலகுவாக பயன்படுத்தத்தக்க இலத்திரனியல் ஆவணங்களை உருவாக்குவதற்கு சொல்முறைப்படுத்தல் மென்பொருள் துணை நிற்கின்றது.

ஆவணங்களை உருவாக்கும்போது பயன்படுத்தத்தக்க பொத்தான்களையும் அதன் பணிகளையும் நோக்குவோம்.




## Text Direction:

எழுத்துக்கள் தட்டச்சிடப்பட வேண்டிய திசையினைத் தீர்மானித்துக் கொள்வதற்காக இந்த பொத்தான் பயன்படுத்தப்படுகின்றது. நாம் வழமையாகப் பயன்படுத்தும் தமிழ், சிங்கள, ஆங்கில, எழுத்துக்கள் இடமிருந்து வலமாகச் செல்வதனால் Righ to left text direction என்ற பொத்தானை அழுத்திய பின்னரே தட்டச்சிட வேண்டும். உலகில் வலமிருந்து இடமாக தட்டச்சிடக் கூடிய மொழிகளும் காணப்படுகின்றன. அவற்றுள் அரபு மொழி முக்கிய இடம் வகிக்கின்றது. அரபு மொழியை தட்டச்சிடும்போது (Left to Right text direction) என்ற பொத்தானை அழுத்த வேண்டும்.

## Align Left:

ஒரு பந்தியை தட்டச்சிட்ட பின்னர் அதனை மூன்று விதங்களில் சீரமைக்க முடியும். இடது பக்கத்தை நோக்கிய சீரமைப்பானது (Align Left) பந்தியின் ஆரம்ப வரிசையிலிருந்து இறுதி வரிசை வரை இடது பக்கத்தை நோக்கி சார்ந்திருக்கும்.

## Center:

மத்தியை நோக்கிய சீரமைப்பானது (Center) பந்தியின் ஆரம்ப வரிசையிலிருந்து இறுதி வரிசை வரை மத்திய பகுதியை நோக்கி சார்ந்திருக்கும்.

## Align Right:

வலது பக்கத்தை நோக்கிய சீரமைப்பானது (Align Right) பந்தியின் ஆரம்ப வரிசையிலிருந்து இறுதி வரிசை வரை வலது பக்கத்தை நோக்கி சார்ந்திருக்கும்.

## Justify:


பந்தியில் காணப்படும் எழுத்துக்கள் அனைத்தையும் சதுர வடிவில் அமைத்துக் கொள்ளத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க பொத்தான் இதுவாகும். சிறிய பந்தியாக இருந்தாலும் பெரிய பந்தியாக இருந்தாலும் இந்த பொத்தானை அழுத்துவதன் மூலம் ஒரே முறையில் பந்தி அமைப்பை மாற்றிக் கொள்ள முடியும். பின்வரும் மூன்று முறைகளில் Justify (நியாயப்படுத்தி) இது பிரயோகிக்கப்படுகின்றது.

**கணினியில் பரீட்சித்துப் பாருங்கள்:**





**Justify Low, Medium, High** என்ற மூன்று முறைகளில் பந்தியின் அமைப்பினை சதுர வடி வாக்குகின்றது. **Low** என்பது சிறிய இடைவெளியுடனும், **Medium** என்பது அதனை விட சிறிது அதிகமான இடைவெளியுடனும், **High** என்பது நீண்ட இடைவெளியுடனும் பந்தியை சதுர வடிவமாக மாற்றுகின்றது.

## Bullets:

❒ பந்திகளை வேறுபடுத்திக் காட்டுவதற்கு **Bullets** பயன்படுத்தப்படுகின்றது. அழகிய, கவர்ச்சிகரமான புள்ளியிடல்கள் **(Bullets)** சொல்முறைப்படுத்தல் மென்பொருளில் இருத்தப்பட்டுள்ளன.

☞ எமது தேவைகளுக்கு ஏற்ப அவற்றைப் பயன் படுத்த முடியும். அதேபோன்று, எமக்குத் தேவையான **Bullets** களையும் உருவாக்கிப் பயன்படுத்திக் கொள்ளவும் முடியும். (இங்கு நீர்த்துளி போன்ற ஒரு புள்ளி பயன்படுத்தப் பட்டிருப்பதை அவதானிக்க.)

**கணினியில் பரீட்சித்துப் பாருங்கள்:**





➢ **Define New Bullet** என்பதை சொடுக்கி படம் 4, படம் 5, படம் 6 என்பன தோன்றும் விதத்தை அவதானியுங்கள்.

❖ உமக்குப் பிடித்தமான Bullets இரண்டினைத் தெரிவு செய்து, இரண்டு பந்திகளை சீரமைத்து உங்கள் நண்பர்களுக்கு காண்பியுங்கள்.


புதிய **Bullet** களை தீர்மானித்துக் கொள்கின்ற போது பின்வரும் படிமுறைகளைக் கையாள்தல் வேண்டும்.

01. **Define New Bullet** என்பதன் மீது சொடுக்க வேண்டும்.


02. அப்போது தோன்றும் **Window** வில் **Symbol, Pictuer, Font** என்பன காட்சியளிக்கும். அதில் நாம் உருவாக்க எத்தனிக்கும் பொத்தானை அழுத்த வேண்டும்.




**படம் 4**




**படம் 5**




**படம் 6**

**Symbol** என்ற பொத்தானை அழுத்தும்போது **Symbol** ஆக கணினியில் இருத்தி வைக்கப்பட்டுள்ள அனைத்து அடையாளங்களும் காட்சியளிக்கும் **Window** தோன்றும். அதிலிருந்து விரும்பியதைத் தெரிவு செய்து எமக்கு விருப்பமான **Bullet** ஒன்றைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

Picture என்ற பொத்தானை அழுத்தும்போது இரண்டு தெரிவுகள் மேற்கொள்ள சந்தர்ப்பத்தினை வழங்கும்.

01. ஏற்கனவே கணினியில் சேமித்து வைக்கப் பட்டுள்ள படங்களை தெரிவு செய்தல்.

02. இணையத்திலிருந்து படங்களை தெரிவு செய்தல்.

**Font** என்ற பொத்தானை அழுத்தும்போது **Latin Text, Complex Script** ஆகிய எழுத்துருக்களில் இருந்து தெரிவு செய்து கொள்ள முடியும்.

**தொடரும்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறுதிக்கட்டத்தில் இரும்புபோல உறுதியாக...

நபீல் அபாபீல்

ஆக மொத்தத்தில், மூன்றாம் தவணைப் பரீட்சையின் காலடிக்கு வந்து சேர்ந்திருக்கின்றோம்.

''படி படி'' என பெற்றோர் நச்சரிக்கத் துவங்கியிருக் கின்றார்கள். ஆசிரியர்களும் மேலதிக வகுப்புக்கள் என்றும் மீட்டல் என்றும் பம்பரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள். நாமும் வீண் அரட்டைகளையும் தேவையற்ற விடயங்களையும் ஒரு மூட்டையாக கட்டி ஆழமாக புதைத்து, அதற்கு மரணச்சடங்கு செய்து விட்டு, அக்கறையுடன் கற்க துவங்கியிருக்கின்றோம்.

**பரீட்சை பற்றிய பல பார்வைகள் நமக்கு உண்டு.**

- பரீட்சைதான் எமது வாழ்வின் இலக்கு. அதில் வெற்றி பெற்றே தீர வேண்டும்.
- பரீட்சை எனது வாழ்வின் முக்கியமான ஒரு மைற்கல். அதை வெற்றிகரமாக கடக்க வேண்டும்.
- பரீட்சை எனது வாழ்வில் ஒரு நிகழ்வு. மற்றபடி அதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ள எதுவுமில்லை.
- பரீட்சையா! பெயருக்கு போய் உட்கார்ந்து விட்டு மணி அடித்தவுடன் தாள்களை கோர்த்துக் கொடுத்து விட்டு, புறப்பட்டு வருவோம்.

வாழ்வில் சாதிக்க நினைப்பவர்களும் தமது பெயரை வரலாற்றில் அழுத்தமாக பதிய நினைப்பவர்களும் இதில் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் என நமக்கு நன்கு தெரியும். வாழ்வில் முக்கிய அங்கமான பரீட்சையை நாம் வெற்றி கொண்டே ஆகவேண்டும். முடியுமான வரை முயற்சிப்பது நமது கடமை; முடிவு அவனது கையில்.

பரீட்சை சம்பந்தமான சில முக்கிய விடயங்களைப் பார்க்க முன்னர் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நடந்ததாக கூறப்படும் ஒரு கதையைப் பார்த்துவிட்டு வரலாம்.

ஓர் அரசன் அபார திறமை கொண்டவனாக இருந்தான். ஒரு நூலை ஒரு தடவை மாத்திரம் வாசித்தால் அதனை அவனுக்கு பூரணமாக மனனம் செய்ய முடியுமானதாக இருந்தது. தான் சந்திக்கும் அனைவருடைய பெயர்களை மாத்திரமின்றி, அவர்களது முழு விபரங்களையும் அவன் நினைவில் வைத்திருந்தான்.

இதைப் பற்றி அவனது அமைச்சர்களுக்கு சொல்ல முடியாத வியப்பு! தமது மன்னர் இத்தனை வேலைப்பளுக்களுக்கு மத்தியில் இத்தனை விடயங்களை எவ்வாறு பத்திரப்படுத்துகிறார்? அவருக்கு ஏதாவது மந்திர சக்தி இருக்கக்கூடும் என பேசிக் கொண்டார்கள். இந்தக் கதை மன்னனின் காதுகளுக்கும் எட்டியது.

ஒரு நாள் மன்னனிடம் இருந்து அமைச்சர்களுக்கு அழைப்பு வந்தது.

''உங்களுக்கெல்லாம் ஒரு பரீட்சை. நான் ஒரு தம்ளர் நிறைய தேன் ஊற்றி உங்கள் கரங்களில் தருவேன். அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக் கொண்டு நீங்கள் பிரதான வீதியைச் சுற்றி வலம் வரவேண்டும். இடையில் ஒரு சொட்டு சிந்தினாலும் உங்கள் தலை உங்களுக்கு சொந்தமாக இருக்காது'' என உறுமி விட்டு எழுந்து சென்று விட்டான்.

"இதன்னடா சோதனை!'' என தமக்குள் புலம்பிக் கொண்டனர் அமைச்சர்கள். ஆனால், மறுக்கவா முடியும்? தமக்கு அரசன் தந்த தம்ளர்களை எடுத்துக் கொண்டு பிரதான வீதியின் வழியாக வலம் வந்தனர். கரங்கள் நடுங்கினாலும் காற்று வீசினாலும் அனைவரது கவனமும் தம்ளரின் மீதே குவிந்திருந்தது. ஒரு சொட்டும் சிந்தவில்லை.

இதைப் பார்த்த அரசன் புன்னகையுடன் சொன்னான்,

இதேபோன்றுதான் எனது நினைவாற்றலும். நான் ஒன்றில் கவனத்தை குவிக்கும்போது வேறு ஒன்றைப் பற்றியும் ஒருதுளிகூட சிந்திப்பதே இல்லை. செய்யும் விடயத்தில் முழுக் கவனத்தையும் குவிப்பதே எனது நினைவாற்றலுக்கு காரணமே தவிர, மற்றபடி நீங்கள் நினைப்பது போல வேறு மந்திரமோ, மாயமோ அல்ல.

பரீட்சைக் காலங்களில் கற்கும்போது நீங்கள் கவனிக்க வேண்டிய முதலாவது விடயத்தை உங்களுக்கு மன்னர் சொல்லி தந்திருக்கின்றார். உங்கள் கல்வியில் முழுக் கவனத்தையும் ஒன்றுகுவியுங்கள்.

**பரீட்சை வெற்றிக்காக 7 வழிமுறைகள்:**

- பரீட்சையின் இறுதிக்கட்டம் கரை காத்திருக்காதீர்கள். பாடங்களை மீட்ட மூன்று கட்டங்களை பின்பற்றுங்கள்.
  1. முதலாவது, அன்றன்றே கற்கும் விடயங்களை மீட்டிக் கொள்ளுங்கள்.
  2. வாரத்தின் இறுதியில் பூரணமான மீட்டலை மேற்கொள்ளுங்கள்.
  3. பரீட்சையின்போது நீங்கள் செய்யப்போவது இறுதி மீட்டல் மாத்திரமே!
- பரீட்சையின் போது எவ்வாறு அசட்டையும் பொடுபோக்கும் காணப்படக் கூடாதோ அதேபோன்று, அளவுக்கு மீறிய பதற்றமும் **(exam stress)** பயமும் காணப்படக் கூடாது. வீணான பதற்றத்தை நீக்க நேர அட்டவணைகளை **(time table)** வகுத்துக் கொள்ளுங்கள்.
- கற்ற பாடங்களை மீட்ட குழுக் கற்றலை **(group study)** மேற்கொள்ளுங்கள். அதில் நீங்கள் தேர்ந்தெடுக்கும் நண்பகள் பற்றி அதிக கவனம் செலுத்துங்கள்.
- மனனம் செய்ய வேண்டிய பகுதிகளை தனியாக தொகுத்துக் கொள்ளுங்கள். ஆழ்மனம் அமைதியாகவும் புத்துணர்ச்சியாகவும் இருக்கும் பொழுதுகளை மனனமாக்க பயன்படுத்துங்கள்.
- அதிகமான மீட்டல்களை மேற்கொள்ளுங்கள். குறிப்பாகப் பரீட்சை வினா, பத்திரங்களை செய்யும் போது நேர முகாமைத்துவம் **(time management)** பற்றி கவனம் செலுத்துங்கள்.
- தேவையான பகுதிகளில் சுருக்க குறிப்புக்கள் எடுத்து கொள்ளுங்கள். சுருக்கக் குறிப்புக்கள் என்பது பாடத்தின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக குறித்துக் கொள்வதே அன்றி, அனைத்து பாடப் பகுதிகளையும் சுருக்கம் சுருக்கமாக தொகுப்பது அல்ல.
- நீங்கள் கற்கும் சூழல் பற்றி அதிக கவனம் செலுத்துங்கள். பல சமயங்களில் நீங்கள் அறியாமலயே உங்கள் சூழல் உங்கள் கல்விக்கு அதிக ஆபத்தை விளைவித்துக் கொண்டிருக்கும்.

அன்பாளன் அல்லாஹ் உங்களுக்காக காத்திருக்கின்றான். நிச்சயம் அவனது அருள் உங்களுக்கு வெற்றியைத் தேடித்தரும். ஆழ்மனம் அமைதியடையும் அதிகாலைப் பொழுதில் எழுந்து இரண்டு ரக்அத்துக்கள் தொழுது விட்டு கற்க ஆரம்பியுங்கள். மனம் சோர்வடையும்போது சில திருமறை வசனங்களை உச்சரித்துக் கொள்ளுங்கள். பரீட்சை மண்டபத்தினுள் நுழைய முன்னர் பிரார்த்தித்துக் கொள்ளுங்கள். அசாத்தியங்களை சாத்தியமாக்கும் வல்லமை அவனிடம் மாத்திரமே உண்டு.

பரீட்சையின் முடிவுகளைப் பற்றி இப்போதே நாம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. முடியுமானவரை முயற்சி செய்வோம். இறுதியில் இறைவன் தரும் முடிவுகளில் திருப்தியடைவோம்.

கற்க, காவலனின் துணை வேண்டிக் கற்க, நிற்க, நினைவல்லாம் அவனது அன்பே நிற்க...! நீயும் அகிலம் ஜெயிக்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 22

## முஸ்லிம் சமூக, சமய மறுமலர்ச்சி


அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்தெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

19 ஆம் நூற்றாண்டில் சமூக, சமய மறுமலர்ச்சியில் முஸ்லிம்களும் பங்களிப்புச் செய்தனர். இதில் முன்னோடியாக அறிஞர் சித்திலெப்பை திகழ்ந்தார். 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் பல சமய தலைவர்கள் எமது சமூகங்களில் கல்வி அபிவிருத்திக்கு பாடுபட்டனர். ஆங்கிலேயர்கள் அமைத்த மிஷனரிகள் இலங்கையில் பல பகுதிகளில் அவர்களின் தொழிற்பாடுகளை மேற்கொண்டு வந்தன. அவர்கள் கல்வித் துறையில் பாரிய முன்னேற்றங்களைக் கண்டிருந்தனர். அவர்களின் பாடசாலைகளும் நாடளாவிய ரீதியில் காணப்பட்டன. மேற்படி கிறிஸ்தவ பாடசாலைகளில் முஸ்லிம்களும் கல்வி கற்று வந்தனர். இந்நிலையில், முஸ்லிம்களின் கல்வித் துறை பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. அரச தொழில் துறைகளிலும் அவர்களுக்கு போதிய இடம் கிடைக்கவில்லை. முஸ்லிம்கள் கல்வியில் பின்தங்கிய நிலையிலிருந்து எப்படியேனும் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என அறிஞர் சித்திலெப்பை உணர்ந்திருந்தார். எனவே, கல்வித் துறையில் முஸ்லிம்களின் உயர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டியது தனது கடமை எனக் கருதினார். மாறி வரும் சமூக சூழலில் கல்வித் துறையில் மாற்றம் ஏற்படவில்லை. இதன் காரணமாக முஸ்லிம்கள் அனைத்து துறைகளிலும் பின்தள்ளப்பட்டிருந்தனர். இதற்காக அவர் எடுத்த முயற்சிகளை பின்வரும் அடிப்படையின் கீழ் தொகுத்து நோக்கலாம்:

1. பாடசாலைகள் அமைத்தல்
2. பாடநூல்கள் வெளியிடல்
3. பத்திரிகைகள் மூலம் கற்கத் தூண்டல்

பாடசாலைகளின் முக்கியத்துவத்தையும் கல்வியின் தேவையையும் முஸ்லிம் சமூகம் உணர்ந்திருக்கவில்லை. எனவே, மத்ரஸா கல்வியையும் ஆங்கில கல்வியையும் ஒருங்கே இணைத்து வழங்குவதன் மூலம் முஸ்லிம்களுக்கு அறிவூட்ட முடியும் எனக் கண்டார். எனினும், அன்றைய முஸ்லிம் சமூகம் சித்திலெப்பையை புரிந்து கொள்ளவில்லை. சமூகத்திலிருந்து கடும் எதிர்ப்பு எழுந்தது. அந்த எதிர்ப்புகளுக்கு முகம் கொடுத்து பாடசாலை அமைக்கும் பணியில் அவரது முழு ஒத்துழைப்பையும் வழங்கினார். அவருடைய பணிகளுக்கு எகிப்திலிருந்து இலங்கை வந்த ஒராபி பாஷா, வாபுச்சி மரிக்கார் முதலியோர் பக்கபலமாக இருந்தனர். இதன் விளைவாக 1884 ஆம் ஆண்டு கொழும்பு சோனகத்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருவில் மத்ரஸதுல் ஹைரியா எனும் பாடசாலை அமைக்கப்பட்டது.

இதனைப் போலவே முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்த கண்டி, கம்பளை, பொல்கஹவல, குருணாகல், காலி, மாத்தறை போன்ற பகுதிகளில் பாடசாலைகளை அமைத்தார். இந்த பாடசாலைகள் பற்றிய விபரங்கள் அரசாங்க நிர்வாக அறிக்கைகளிலும் முஸ்லிம் நேசன் பத்திரிகையிலும் இடம் பெற்றுள்ளன.

முஸ்லிம் சமூகத்தின் கல்வி அபிவிருத்தி பெண்களின் கல்வி அபிவிருத்தியைப் புறக்கணித்து உருவாக முடியாது என சித்திலெப்பை கருதினார். எனவே, பெண்கள் கல்விக்கும் இடமளிக்க வேண்டுமென்ற நோக்கில் லேடி ஹங்பொர் அம்மையாரின் உதவியோடு பெண்களுக்கான பாடசாலைகள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். கண்டியில் பெண்களுக்கான மூன்று பாடசாலைகள் அமைக்கப்பட்டன. இவை 1891 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இது போன்ற ஒரு பாடசாலை குருணாகலையிலும் ஆரம்பிக்கப்பட்டது. சித்திலெப்பை 1891 இல் கொழும்பு மருதானை பள்ளிவாசலில் நிகழ்த்திய உரை கொழும்பு வாழ் மக்களின் சிந்தனைக் கிளறலுக்கு காரணமாகியது; இதன் விளைவாகவே 1892 ஆம் ஆண்டு கொழும்பு ஸாஹிரா கல்லூரி உருவாக்கம் கண்டது.



சித்திலெப்பை கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்புக்களின் இன்னொரு வெளிப்பாடாக அவர் ஆக்கிய பாடநூல்கள் அமைந்தன. தமிழ், எண் கணிதம், அரபு முதலிய பாடங்களுக்கான பாடநூல்களை அவர் எழுதினார். இந்நூல்கள் ஆரம்ப வகுப்பு மாணவர்களின் தேவைக்காக எழுதப்பட்டவையாகும். அவர் எழுதிய தமிழ் நூல் எளிய தமிழில் வாழ்வில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கங்கள், பண்பாடுகள் என்பவற்றை உள்ளடக்கி இருந்தது.

பத்திரிகைகளில் கல்வி விழிப்பூட்டல் ஆக்கங்களை எழுதியமை சித்திலெப்பை பின்பற்றிய அடுத்த வழிமுறையாகும். முஸ்லிம் நேசன் என்ற பத்திரிகையை இந்த நோக்கத்திற்காகவே அவர் வெளியிட்டார். அதன் முதல் இதழில் இந்த இலக்கை பின்வருமாறு எழுதுகிறார்:

"கல்வி என்பது பாஷைகளை வாசித்தறிவது மாத்திரமல்ல, மன விரிவுக்கும் தெளிவுக்கும் பல வித அறிவு நூல்களையும் நன்றாராய்வதாம். ஆகையால், அரபு கிதாபுகளில் இருந்து அறிய வேண்டிய அறிவுகளை இங்கிலிஷ் முதலிய பாஷைகளில் உள்ள கல்விகளையும் விசேஷமான புதினங்களையும் படித்தவர்களும் படியாதவர்களும் முதியவர்களும் இளையவர்களும் மற்றையவர்களும் தங்கள் வேலை முயற்சிகளோடு வாசித்தறிந்து கொள்ளும்படி உலமாக்கள், கல்விமான்கள் ஆகிய இவர்களுடைய உதவியைக் கொண்டு ஒரு பத்திரிகையை வாரம்தோறும் பிரசுரம் செய்ய விரும்பி இப்பத்திரிகைக்கு முஸ்லிம் நேசன் எனப் பெயரிட்டோம்."

சித்திலெப்பை இந்த நோக்கத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றினார். அவரும் அவரைச் சார்ந்தவர்களும் முஸ்லிம் சமூகத்தின் கல்வி மறுமலர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் முகமாக முஸ்லிம் நேசனைப் பயன்படுத்தினர். மார்க்கக் கல்வி, ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம், பயனுள்ள கற்பித்தல் முறைகள், கல்வி ஊக்குவித்தலுக்கான வழிமுறைகள் ஆன்மிக சிந்தனைகள் என பல விடயங்கள் அதில் எழுதப்பட்டன.

இவ்வகையில் நோக்கும்போது முஸ்லிம்களின் சமூக மறுமலர்ச்சியின் பிரதான அங்கமாக கல்வியின் விருத்தியில் அவர்கள் காட்டிய கரிசனையும் அக்கறையும் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியரை
## மதிப்போம்

தங்கம் வெள்ளி நாணயங்கள்
நபிமார் விட்டுச் சென்றதில்லை
கல்வி ஞானம் ஒன்றையே
சொத்தாய் விட்டுச் சென்றனரே!

கல்வியறிவு பெற்றவரே
கண்ணிரண்டைக் கொண்டவராம்
என்று சான்றோர் புகழ்ந்தனரே
அறிவைத் தேடி படிப்பதற்கே

தானும் கற்றுக் கல்விதனை
பிறரும் கற்க செய்தவரே
படைத்தவனருளை பெற்றவராம்
பண்புடன் நபிகள் பகிர்ந்தாரே

கல்வியறிவு பெற்றவரே
நபிமார் வாரிசு ஆனவரே
என்று நபிமணி நவின்றதனால்
ஏற்று நடப்பது கடமையே!

பாலர் நாளும் கல்வி பெற
பண்புடன் நாடு வாழ்வு பெற
பாதை காட்டும் ஆசானே
பாரில் உயர்ந்த மானிடரே!

இன மொழி பேதம் பாராமல்
இனிதாய் பாடம் ஊட்டிவிட
ஆர்வம் கொண்ட ஆசானின்
அனந்தரச் சொத்தாய் வளர்வோமே!

அல்லாஹ் தந்த அருட்கொடையாம்
எங்கள் அன்பு ஆசானாம்
ஏற்ற முறையில் மதித்திடுவோம்
ஏகனை நித்தம் வேண்டிடுவோம்!

✍ ஏ.எம்.எம். அப்கீ
கமு/சது முஸ்லிம் மத்திய ம.வி.




# பிரிய மொழி...

பன்னகைக்கும் இதயத்தில்
பேதங்கள் எதுவுமில்லை
பன்னகைக்கும் இதயமாகு
உன்னை வெல்ல யாருமில்லை!

பதிதான உள்ளத்தையும்
பிரியம் கொள்ள வைக்கும்
பிரியம்போது உன்னை
பரியா வலி தேற்றும்

அர்த்தமற்ற வெடிச்சிரிப்பால்
அனைத்தையும் இழந்து நிற்பாய் – ஆனால்
உள்ளத்தின் உள்ளார்ந்த பன்னகையால்
உன் கரங்களில் தவழும் – இவ்வுலகம்!

மொழிகளற்ற ஊமை கூட
உணர்ந்து கொள்ளும் உன்னத மொழி
கல்லான உள்ளத்தைக் கூட
கரைத்திடும் மொழி!
பன்னகைத்துப் பார் நீயும்!



✍ பின்த் ஸைன்
ஜாமிஆ ஆயிஷா ஸித்தீக்கா

# கல்லூரி வாழ்வினிலே!

நமது வாழ்வின் பொக்கிஷமாம்
கல்லூரி வாழ்வு
இறைவனால் எமக்கு கிடைத்த வரமாம்
கல்லூரி வாழ்வு

நண்பர்களிடத்தே நட்புகள் கூடும்
கலைக்கூடமாம் அது!
நல்லறிவைப் புகட்டும்
பள்ளிக்கூடமாம் அது!

கல்லூரி வாழ்வினிலே
இலட்சியங்கள் வாழ்ந்ததுவே
கண்ணீர்த் துளியினிலே எம்
கனவுகள் நனவாகியதே!

இறைவன் மீண்டும் கல்லூரி
வாழ்வை வரமாகத் தருவானா?



✍ பாத்திமா நுப்லா நிஸ்தார்
பெலந்த முஸ்லிம் வி.

## பேசும் கவிதை - இல 30



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.


**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2017 நவம்பர் 20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் கவிதை - இல 29



## முதலிடம் பெற்ற கவிதை

## யார் அவர்கள்?

தலைகுனிந்து தான் நிறைக்கும்
நாம் - தலைநிமிர்ந்து நடைபோட
தம்மையே - மெழுகாய்
உருக்கி...
ஒளியெனும் பூ ஏந்தி
மணம்பரம்பும் ஊதுவர்த்திகள்
அவர்கள்...
இரண்டாம் உறவாய்
எம்மோடிணைந்து...
பார் எனும் வானில்
சிறகடித்துப் பறந்திட
வழிகாட்டிடும் அவர்கள்...
அவர்கள்தான் ஆசான்கள்...!

**ஏ.எம். சப்ரியா**
**புத்தளம்**

## வாழ்க!

அல்லும் பகலும் நல்ல
அறிவுப் புனலைத் தெளித்து
கல்விப் பயிரை வளர்க்கும்
கலைக் குரவர் (உழவர்)
வாழ்க! வாழ்க!!

**ஆர்.எம். அஸ்ரித் முஹமட்**
**பொ/அல் அஸ்ஹர் ம.வி.**
**கல்லளை கதுறுவெல**

## உளி அவர்

தனது வலிகள் மறைத்து
நமக்காக உளியாகுபவர் அவர்
அறிவியலால்
அகிலத்திற்கு அழகு சேர்ப்பவர்
அன்பால் பண்பை விதைப்பவர்

**எஸ்.எப். அஸ்மா**
**தரம்-08**
**நிக/அபுக்காகம் மு.ம.வி.**

பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்

## ஒளி விளக்கு

அறிவின் ஆயுள் தீபம்
ஆயிரம் ஒளிவிளக்கும் மிளிரும்
அன்பின் மறுஉருவில்
இலட்சியத்தின் ஆணிவேர்
நன்றியின் வதிவிடம்
அழியாச் செல்வத்தை அறிவித்த
ஆசானே!!!
புரியாத மழலையை
அறிவால் கவருவீர்
பூவிதழ் புன்னகை உம்மிடம்
உமக்காய் பிரார்த்திக்கும்
எம் கரமும்...

**அன்ஸிபா நாஸிம்**
**புத்தளம்**

## அறிவைத் தேடி

அறிவைத் தேடி வந்த - என்னை
அன்பாக ஏற்றுக் கொண்டாய்
அகர எழுத்தை கற்றுத் தந்தாய்
அறிவுலகைக் காட்டித் தந்தாய்
என் இரண்டாம் தந்தையே!
நான் தவறிடுகையில்
தட்டிக் கேட்டாய்
தடுக்கி விழுகையில்
கரம் தந்தாய்
என் இரண்டாம் தந்தையே
உனக்காக இரு கரம்
ஏந்துவேன் ஆசானே!

**மௌபியா இப்றாஹீம்**
**புத்தளம்**

## உம்மை போற்றுகிறோம்..!

எப்போதும் ஒளி வீசும்
விளக்காய் இருந்தீர்கள்
ஓய்வுப் பொழுதையும்
எமக்காக அர்ப்பணித்தீர்கள்
நாளைய நாளில்
நாம் வெற்றி வாகை
சூடவேண்டும் என்பதையே
உமது ஒற்றைக்கனவாக வரித்தீர்கள்

**எஸ்.எம். அப்ராஸ்**
**தரம்-08**
**நிக/அபுக்காகம் மு.ம.வி.**

## இலட்சியத்திற்கு

ஆகாயம் வரை ஓராயிரம் கனவுகள்
காரிருள் பயம் நீக்கி என்னை
எனக்கு கற்பித்தவர் நீர்...!
மாறும் உலகம் உம் பணி
மாற்ற நினைத்தால்
நாளைய மனித மாற்றம்
நாளைய மாற்றம் நலவாய் மலர
கோடி முறை உம்
பணி போற்றுகின்றேன்

**எப். சஹ்னாஸ் சிபானி**
**கனமூலை,**
**மதுரங்குளி**

## புரட்சி செய்திடு

வீராவேகம் கொண்ட
உன் சிந்தனைகள்
எம் சமூகத்தின் விடிவுக்கான
விதைகளாகட்டும்
உன் சிந்தனா ரீதியான
கருத்துக்கள் எம்மை
முடக்க நினைக்கும்
அதிகார வர்க்கத்தின்
அகங்காரக் கரங்களை குறிக்கட்டும்
வாளின் வலிமையை விட - உன்
எழுதுகோலுக்கு பல மடங்கு
வலிமையுண்டு என்பதை
அவர்களுக்கு உணர்த்திடு!

**ஆர்.எப். ஸஹ்ரா**
**குணசிங்கபுர.**
**கொழும்பு - 12**

## என்னைச் செதுக்குபவரே..!

உயரப்பறக்கும்
இராஜாளி போல
என் சிந்தனைகளுக்கும்
சிறகு கட்டியவரே
களைகள் அகற்றி
கலைகள் கற்றுத்தந்த கணவானே
உம்மை போற்றுகின்றோம்!

**எம். ஸஜ்ஜாத்**
**கொ/ஸாஹிரா கல்லூரி**
**கொழும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விரைவு - உயர்வு - துணிவு

## உலக கிரிக்கெட் பதிவு புத்தகத்தில் குமார் தர்மசேன



2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 வரை சர்வதேச போட்டிகளில் நடுவராக கடமையாற்றிய குமார் தர்மசேன 150 டெஸ்ட், ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளில் நடுவராக கடமை புரிந்ததன் மூலமே அவர் இச்சாதனையை தன்வசப்படுத்திக் கொண்டுள்ளார். இலங்கையை சேர்ந்த அசோக டி. சில்வா இதற்கு முன் இச்சாதனையை தன்வசப்படுத்திக் கொண்டதோடு 150 போட்டிகளில் நடுவராக கடமைபுரியும் இலங்கையர் குமார் தர்மசேன என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது. இதேவேளை, உலகிலே அதிக கிரிக்கெட் போட்டிகளில் நடுவராக பாகிஸ்தானை சேர்ந்த அலீம் தார் கடமை புரிந்துள்ளதுடன் அவர் 341 சர்வதேச போட்டிகளில் நடுவராக கடமையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முன்மாதிரி வீரர் லோரன்ஸ் லெமிக்ஸ் (Lawrence Lemieux)



லோரன்ஸ் லெமிக்ஸ் கனடா நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட படகோட்டி வீரர் ஆவார். 1988 ஆம் ஆண்டு தென்கொரியா சோல் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின்போது அனைத்து மக்களினதும் மனதில் இடம் பிடித்த முன்மாதிரி வீரராவார். இன்று வரை ஒலிம்பிக் வரலாற்றில் அவரது பெயர் பதியப்பட்டுள்ளது. காரணம் அவர் 1988 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஒலிம்பிக் போட்டியின்போது 450 கிலோ மீற்றர் தூரமுள்ள படகு ஓட்டப்போட்டியில் (sailing) பங்குபற்றி முன்னிலையில் இருந்தார். அவருடன் போட்டியிட்ட சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த சக வீரர் போட்டியின் இடையில் படகு கவிழ்ந்து ஆபத்தான நிலையில் மாட்டிக் கொண்டிருந்தார். அப்போது லோரன்ஸ் லெமிக்ஸ் தனது ஒலிம்பிக் பதக்க கனவையும் கலைத்து விட்டு சகவீரருக்கு உதவி செய்து அவரின் உயிரைக் காப்பாற்றினார். இது அவ்வருட ஒலிம்பிக் போட்டியின் முக்கிய நிகழ்வாக பதியப்பட்டதுடன். லோரன்ஸ் லெமிக்ஸுக்கு ஒலிம்பிக் கமிட்டியினால் வழங்கப்படும் (Pierre de Coubertin Medal) என்ற கௌரவ பதக்கம் வழங்கப்பட்டது. போட்டியிலும் மனிதத்துவத்திற்கே முதலிடம் என்பதற்கு இவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளையாட்டுலகம் கருதுகிறது.

## 2030 ஆம் ஆண்டு காற்பந்து மூன்று நாடுகளில்



2030 ஆம் ஆண்டுடன் உலக கிண்ண காற்பந்து போட்டித் தொடர் ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இந்நிலையில், அந்தத் தொடரை நடத்துவதற்கு, உருகுவே, ஆர்ஜன்டீனா மற்றும் பரகுவே ஆகிய நாடுகள் கூட்டாக ஏலத்தில் பங்கேற்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2018 உலக கிண்ணம் ரஷ்யாவிலும், 2022 உலக கிண்ணம் கத்தாரிலும் நடைபெறும். அதேநேரம், 2026 ஆம் ஆண்டுக்கான உலக கிண்ணம் அமெரிக்கா மற்றும் மெக்சிகோவில் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி 2030 ஆம் ஆண்டுக்கான உலக கிண்ணத் தொடரை நடத்தும் வாய்ப்பு ஆங்கிலேய நாடொன்றுக்கு வழங்குவதற்கான யோசனை முன்னதாகவே முன்வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையிலேயே குறித்த 3 நாடுகளும் கூட்டாக இந்த போட்டித் தொடரை நடத்தும் வாய்ப்பைக் கோரவுள்ளதாக அறிவித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சர்வதேச கிரிக்கட் பேரவையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கிரிக்கட் விதிகள்

- டெஸ்ட் போட்டிகளில் ஓர் அணி உபரி வீரர்களாக 6 பேரை பெயரிட முடியும்.
- கிரிக்கட் துடுப்பின் அகலம் மற்றும் நீளத்துக் கான விதிகளில் மாற்றம் இல்லை என்றாலும், துடுப்பின் விளிம்பு பருமன் 40 மில்லி மீற்ற ருக்கு அதிகரிக்காமல் இருக்க வேண்டும்.
- துடுப்பின் மொத்த பருமன் 67 மில்லி மீற்றருக் கும் குறைவாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- விக்கட்டுடன் பெய்ல்ஸை இணைத்துக் கட்டுவதற்கும் சர்வதேச கிரிக்கட் பேரவை அனுமதித்துள்ளது.
- டெஸ்ட் போட்டிகளில் ஆட்டமிழப்பு ஒன்றின் பின்னரான இடைவேளை 2 நிமிடங்களில் இருந்து 3 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- 20க்கு 20 போட்டிகளில், ஏதேனும் காரணங் களுக்காக போட்டி 10 ஓவர்களுக்கும் குறைவாக மட்டுப்படுத்தப்பட்டால், பந்துவீச்சாளர் ஒருவர் குறைந்த பட்சம் வீச வேண்டிய ஓவர்கள் இரண்டு ஆகும்.
- கிரிக்கட் போட்டிகளில் முன்னர் துடுப்பாட்ட வீரரின் எல்லைக் கோட்டுக்கு முன்னால் இரண்டு தடவைகள் பந்து விழுவது அனுமதிக் கப்பட்டிருந்தது.
- ஆடுகளத்துக்கு வெளியில் வீழ்ந்தாலோ, துடுப்பாட்ட வீரரை பந்து அடைவதற்கு முன் னர் அதனை களத்தடுப்பாளர் தடுத்தாலோ அதுவும் செல்லுபடியற்ற பந்தாக அறிவிக்கப் படும்.

## ஒழுக்கமுள்ள வீரர் உறுதியான தலைவர்!

ஒரு மாணவர் சிறந்த விளையாட்டு வீரராக திகழ்கின்றபோது அவர் ஒரு சிறந்த தலைவராகவும் உருவாகிறார் என்பது யதார்த்தமான விடயமாகும். ஓராண்டு பேச்சு வார்த்தையில் ஒருவரைப் பற்றி கற்றுக் கொள்வதை விட ஒரு மணிநேர விளையாட்டில் கற்றுக் கொள்ளலாம் என்றார் பிளேட்டோ என்ற கிரேக்க அறிஞர்.

விளையாட்டுகள் மனிதனின் தலைமைப் பண்புகளை வளர்க்கின்றன.

- ஒரு விளையாட்டின் விதி முறைகளைத் தெரிந்து கொள்வது
- அதன்படி நடப்பது
- மற்றவர்களுடன் ஒருங்கிணைந்து விளை யாடுவது
- ஓர் அணி என்ற உணர்வுடன் விளையாடுவது
- எதிரணியானாலும் வெற்றி பெற்றவரைப் பாராட்டுவது
- நமது பலம் மற்றும் பலவீனங்களைப் புரிந்து கொள்வது
- ஓர் அணியின் தலைவராக இருந்து விளை யாடுவது
- தோல்வியடைந்தாலும் விளையாட்டை விட்டுவிடாமல் தொடர்ந்து விளையாடி அடுத்த போட்டியில் வெற்றி பெற முயல்வது

## பொதுநலவாய விளையாட்டு விழாவின் தீப்பந்தம் இலங்கையில்

2018 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொது நலவாய விளையாட்டுத் தொடரின் முன் னேற்பாடுகளில் ஒன்றாக தீப்பந்தம் ஏற்றும் நிகழ்வுகள் பொதுநலவாய நாடு களுக்கு கைமாற்றப்பட்டு வருகின்றன.

இத்தொடரில் பொதுநலவாய விளையாட்டு விழா தீப்பந்தம் கடந்த மாதம் 12 ஆம் திகதி முதல் 16 வரை இலங்கையில் ஏற்றி வைக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை அவுஸ்திரேலியா கோலட்கோஸ்ட் நகரத்தில் பொதுநலவாய விளையாட்டுக்கள் நடைபெற ஏற்பாடுகள் நடை பெற்று வருகின்றன. ஏலவே 1938, 1962, 1982, 2006 ஆம் ஆண்டுகளிலும் அவுஸ்திரேலியா நாட்டில் பொதுநலவாய விளையாட்டுக்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

Gold Coast 2018
XXI Commonwealth Games



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்




**நேரம் 45 நிமிடம்**
**வினாப்பத்திரம் I**



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்


தரப்பட்டுள்ள எண் கூட்டத்தில் குறிக்கப்பட்ட எண்களை அவதானித்து பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

1.




i. 3406 ii. 3232
iii. 3206 iv. 3233

2.




i. 799 ii. 819
iii. 809 iv. 890

3. 75 முதல் 85 வரை உள்ள எண்களில் இரட்டை எண்கள் எத்தனை உண்டு?

i. 6 ii. 5 iii. 7 iv. 2

4. பின்வரும் எண் கோலங்களில் வித்தியாசமான எண் கோலம் எது?

i.

| | |
|---|---|
| 40 | 24 |
| 32 | 16 |


ii.

| | |
|---|---|
| 35 | 14 |
| 28 | 42 |

iii.

| | |
|---|---|
| 34 | 18 |
| 30 | 24 |

5. தரப்பட்ட உருக்களில் நிழற்றப்படாத பகுதியின் பின்னத்தை எழுதுக.



i. 3/9
ii. 6/9
iii. 3/18

6. வெற்றிடத்திற்கு வரவேண்டிய பொருத்தமான எண்ணைக் கண்டுபிடித்து அவ் எண்ணின் கீழ் கீறிடுக.

5, 6, 15 10, 5, 25 7, 4, .....

i. 18 ii. 14 iii. 16

பின்வரும் எண் தொகுதியின் மிகப் பெரிய எண்ணின் கீழ் கீறிடுக.

7. i. 3.4 ii. 3.09
iii. 3.099 iv. 3.199

8. i. 2.2 ii. 2.54
iii. 2.194 iv. 2.099

பின்வரும் எண் தொகுதியின் கீழ் மிகச் சிறிய எண்ணின் கீழ் கீறிடுக.

9. i. 8.18 ii. 8.82
iii. 8.099 iv. 8.199

10. i. 6.66 ii. 6.06
iii. 6.766 iv. 6.1

மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.

11. 3.5 கிலோ கிராம் எத்தனை கிராம்?
i. 350 கிராம் ii. 3050 கிராம்
iii. 3500 கிராம் iv. 35 கிராம்

12. 7.07 கிலோ கிராம் எத்தனை கிராம்?
i. 7070 கிராம் ii. 7700 கிராம்
iii. 7770 கிராம் iv. 7007 கிராம்

13. தகப்பன் மகளை விட எப்போதும்
i. வயதில் இளையவர்
ii. வயதில் மூத்தவர்
iii. உயரம் கூடியவர்

14. குமார் தனது 10 ஆவது பிறந்த நாளை 2016 ஆம் ஆண்டு கொண்டாடினான். அவன் 3 ஆவது பிறந்த நாளை எப்போது கொண்டாடியிருப்பான்?
i. 2006 ஆம் ஆண்டு
ii. 2000 ஆம் ஆண்டு
iii. 2009 ஆம் ஆண்டு

15. 1 இலிருந்து 10 வரையில் உள்ள இரட்டை எண்களை உரோம எண் குறிகளில் எழுதியதில் மிகப் பொருத்தமானதின் கீழ் கீறிடுக.
i. III, IV, VI, XI ii. II, IV, VII, VIII
iii. II, IV, VI, VIII

16. 7001 இன் 7 இன் இடப்பெறுமானம்
i. 1000 ii. 700 iii. 7000

வெற்றிடங்களுக்கு வரவேண்டிய இலக்கங்களைக் கண்டுபிடித்து அதன் கீழ் கீறிடுக.

17.
5 7 9 ...
1 2 3 6 -
4 5 5 9

i. 6 ii. 8 iii. 5

18.
6 0 5 ....
5 9 4 5
0 1 0 8

i. 3 ii. 4 iii. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. 8, 4, 2, 1 ஆகிய இலக்கங்களைப் பயன்படுத்தி ஆயிரத்திடத்தில் 8 வருடம் நான்கு எண்களையும் எழுதிய எண் கூட்டத்தை தெரிவு செய்க.

| i. | ii. | iii. |
|---|---|---|
| 8 4 2 1 | 4 2 8 1 | 8 4 2 1 |
| 8 2 4 1 | 8 2 1 4 | 8 4 1 3 |
| 8 1 4 2 | 2 1 4 8 | 8 3 4 1 |
| 8 1 2 4 | 1 2 4 8 | 8 1 4 3 |

20. இரண்டாயிரத்து நூறில் இருந்து ஆயிரத்து ஐம்பதைக் கழித்தால் வரும் விடை?

i. 1050 ii. 1150 iii. 1250

21. நான்காயிரத்து ஒன்பதுடன் தொண்ணூற்று ஒன்பதைக் கூட்டினால் வரும் விடை?

i. 4008 ii. 4118 iii. 4108

**தரப்பட்ட எண்தொகுதியை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9431 | 9688 | 9101 | 9861 | 9909 | 9801 |

22. மிகப் பெரிய எண் எது?

23. மிகச் சிறிய எண் எது?

24. மிகப் பெரிய எண்ணையும் மிகச் சிறிய எண்ணையும் கூட்டினால் வரும் விடை?

25. ஆயிரம் ரூபா தாள்காசு ஒன்றை ஐம்பது ரூபா தாள் காசுகளாக மாற்றினால் எத்தனை தாள் காசு பெறலாம்?

26. 3.5 கிலோ கிராம் எத்தனை கிராம்?

27. 7/10 ஐ தசமத்தில் எழுதுக?

28. 3 4/10 ஐ தசமத்தில் எழுதுக?

29. வருடத்தில் எத்தனை வாரங்கள்?

30.

| 3 | 4 | 5 | 2 | + |
|---|---|---|---|---|
| ... | ... | ... | ... | |
| 8 | 5 | 4 | 1 | |

வெற்றிடத்திற்கு வரவேண்டிய இலக்கங்கள்?

i. 5, 0, 8, 9 ii. 5, 0, 2, 8

iii. 5, 1, 8, 9 iv. 5, 1, 1, 2

**பாடலை அவதானித்து வினாக்களுக்கு விடைதருக.**

வெண்ணிலாவே ஓடிவா
வானில் இருந்து இறங்கிவா
வெள்ளிக்காசு கொண்டுவா
மிட்டாய் வாங்கி மகிழ வா

31. பாடலில் வந்த ஓர் எழுத்துச் சொல்?

i. வெண்ணிலா ii. வா

iii. மிட்டாய்

32. பாடலுக்கு பொருத்தமான தலைப்பு?

i. வெண்ணிலா ii. வெள்ளிக்காசு

iii. வானம்

33. 'வா' என்பதற்கான எதிர் பதம்?

i. வாழ் ii. போ

iii. விரைந்து

**ஆங்கில சொற்களை எழுதுக.**

34. சந்திரன் :...............................

35. வானம் :...............................

**ஒலி மரபுகளை தருக.**

36. கழுதை :...............................

37. தாரா :...............................

**பயனிலைச் சொல்லை கோடிடுக.**

38. பாபுவும் கோபியும் ஆடிப்பாடினர்.

39. கப்பல் கடலில் சென்றது.

40. அழகாக மலர்ந்தன பூக்கள்.

## விடைகள்

| | | |
|---|---|---|
| 1. i | 19. i | 37. கத்தும் |
| 2. i | 20. i | 38. ஆடிப்பாடினர் |
| 3. ii | 21. iii | 39. சென்றது |
| 4. iii | 22. 9909 | 40. மலர்ந்தது |
| 5. iii | 23. 9101 | |
| 6. ii | 24. 19001 | |
| 7. i | 25. 20 தாள் காசு | |
| 8. i | 26. 3500 கிராம் | |
| 9. iii | 27. 0.7 | |
| 10. ii | 28. 3.4 | |
| 11. iii | 29. 52 வாரங்கள் | |
| 12. i | 30. i | |
| 13. ii | 31. ii | |
| 14. iii | 32. i | |
| 15. iii | 33. ii | |
| 16. i | 34. Moon | |
| 17. iii | 35. Sky | |
| 18. i | 36. கத்தும் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்
வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

"ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்பது வள்ளுவர் வாக்கு. மரம் கனி தரும், பசு பால் தரும். ஒழுக்கம் விழுப்பம் தரும் என்று குறள் கூறுகிறது. விழுப்பம் என்பது சிறப்பு, இதனால் நாம் சிறப்படைய வேண்டுமானால் ஒழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

1. மேற்கூறப்பட்ட பந்திக்கு பொருத்தமான தலைப்பு?
   i. திருக்குறள்  ii. ஒழுக்கம்
   iii. வள்ளுவர்
2. ஒழுக்கம் எம்மிடையே ஏற்படுத்துவது?
   i. சிறப்பு  ii. வாக்கு  iii. சக்தி
3. திருக்குறளை இயற்றியவர்?
   i. ஔவையார்  ii. பாரதியார்
   iii. திருவள்ளுவர்
4. பந்தியில் இடம்பெற்ற உயர்திணை பன்மைச் சொல்?
   i. நாம்  ii. வள்ளுவர்  iii. பசு
5. 'கதறும்' என்ற ஒலிமரபை தரக்கூடிய விலங்கு?
   i. எருமை  ii. பசு  iii. குரங்கு

**மிகப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து கோடிடுக.**

வாசுகி நாயையும் கூட்டிக் கொண்டு 6. (மழை, மலை)த் தொடரில் ஏறினாள். 7. (வலி, வழி) எங்கும் 8. (மழை, மலை) பெய்து கொண்டிருந்தது. இதனால் அவளது மேனி விரைவில் 9. (வளி, வலி) எடுத்தது. இதனால் அவள் 10. (கிளி, கிலி) கொண்டாள்.

**ஒத்த கருத்து தருக.**

11. விண் :.........................
12. நூல் :.........................

**சொற்களை திருத்தி சரியாக எழுதுக.**

13. நட்ச்சத்திரம் :.........................
14. உறுளைக்கிலங்கு :.........................

**எதிர்க் கருத்து தருக.**

15. சோம்பல் :.........................
16. அகம் :.........................

**மிகப் பொருத்தமான அடைமொழிச் சொற்களை எழுதுக.**

17. ............. கடல்
18. ............. வானம்

**தரப்பட்டுள்ள மூன்று படங்களிலும் மிக நெருங்கிய தொர்புடைய சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

19.   

   i. மின்சாரம்  ii. தொடர்பு சாதனம்
   iii. பொழுதுபோக்கு

20.   

   i. விவசாயம்  ii. மீன்பிடி
   iii. கட்டட நிர்மாணம்

**பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.**

21. மகே லஸ்ஸன பொத்த .........................
22. ஒயா கௌத ? .........................

**ஆங்கில சொல்லை தருக.**

23. Office :.........................
24. Class Room :.........................

**சரியான விடையை தெரிந்து கோடிடுக.**

25. i. மீன் குட்டி குளத்தில் நீந்தும்.
    ii. உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டு.
    iii. 'க்' என்பது ஆயுத எழுத்து.
26. i. அவர் நல்லவர் அல்லர்.
    ii. அவை பாய்ந்து ஓடியது.
    iii. பாபு ராதவின் தங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாக்கியத்தை ஒழுங்கமைக்குக.**

27. பல-பொன்னுச்சாமி-கற்றவன்-வித்தைகளைக்

28. முகம்-துலக்கி-கழுவினாள்-பார்வதி-பல்

**பழமொழியை பூர்த்தி செய்க.**

29. அடம்பன் கொடியும் ..............................

30. புத்திமான் ..............................

31. அடிக்கு மேல் அடி அடித்தால் ......................

32. மின்னேரியா குளத்தைக் கட்டிய மன்னன்?

i. தாதுசேனன் ii. மகாசேனன்
iii. பண்டுகாபயன்

33. கலாவாவி குளத்தைக் கட்டிய மன்னன்?

i. தாதுசேனன் ii. பராக்கிரமபாகு
iii. மகாசேனன்

34. பல கிளைகள் உருவாவதற்காக தாவரக் கிளைக்களைக் கத்தரித்து பல கிளைகளை உருவாக்கும் தாவரம்?

i. திராட்சை ii. மா
iii. அவரை

35. இலங்கையில் ரம்புட்டான் அதிகளவில் செய்கை பண்ணப்படும் இடம்?

i. கண்டி ii. யாழ்ப்பாணம்
iii. மாத்தறை iv. மல்வானை

36. இலங்கையில் திராட்சை அதிகளவில் உற்பத்தி செய்யப்படும் இடம்?

i. கண்டி ii. காலி
iii. நுவரெலியா iv. யாழ்ப்பாணம்

37. ஊறுகாய் செய்யப் பயன்படுவது எது?

i. கரட் ii. தேசிக்காய்
iii. மிளகாய் iv. உருளைக்கிழங்கு

38. புத்தாண்டுக் காலத்தில் விளையாடப்படும் விளையாட்டுக்கள்

i. போர்த் தேங்காய், பல்லாங்குழி
ii. றபான் அடித்தல், கரப்பந்தாட்டம்
iii. முட்டி உடைத்தல், எல்லே
iv. சடுகுடு, உதைப்பந்தாட்டம்

39. ஒல்லாந்தரினால் கட்டப்பட்ட புகழ்மிக்க கோட்டை காணப்படும் இடம்?

i. கொழும்பு ii. கண்டி
iii. காலி iv. பொலன்னறுவை

40. புனித வெள்ளரசு மரம் காணப்படும் இடம்?

i. கொழும்பு ii. கண்டி
iii. பொலன்னறுவை iv. அனுராதபுரம்

41. யாப்பகுவ அமையப் பெற்றுள்ள மாவட்டம்?

i. அனுராதபுரம் ii. கண்டி
iii. குருணாகல் iv. கொழும்பு

**குறியீட்டிற்குப் பொருத்தமான பெயரை எழுதுக.**

42. 
..........................

43. 
..........................

44. 
..........................

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

45. கரையான் பிராணியால் சூழலுக்கு ஏற்படும் நன்மை?

i. பூக்களின் மகரந்த சேர்க்கைக்கு உதவும்
ii. குப்பை கூளங்களை உண்ணும்
iii. இலை, சடுகு, சிறிய தடிகளை உக்க உதவும்

46. எமது நாட்டிற்கு மட்டும் உரித்தான பிராணிகள் யாவை?

i. விரால் மீன், பச்சை பாம்பு, காட்டுக் கோழி, கருங்குரங்கு
ii. கருங்குரங்கு, சிங்கம், முயல், காட்டுக் கோழி
iii. காட்டுக்கோழி, பச்சைப்பாம்பு, யானை, தேரை

47. மீன்கள் நீந்துவதற்கு பயன்படுத்துவது?

i. வால் ii. செட்டை
iii. தலை

48. நச்சுப் பையைக் கொண்டு காணப்படும் பிராணி எது?

i. குளவி ii. தேனீ iii. பாம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. நுளம்பினால் பரவும் நோய்கள்?

i. யானைக்கால், மூளைக்காய்ச்சல், மலேரியா

ii. டெங்கு, நெருப்புக்காய்ச்சல், யானைக்கால்

iii. மலேரியா, டெங்கு, வாந்திபேதி

50. பின்வரும் தாவரங்களுள் எவற்றில் ஆணி வேர் தொகுதி காணப்படும்?

i. வேம்பு ii. சோளம்
iii. தென்னை

51. பின்வரும் பழங்களில் திரள்பழம் எது?

i. அன்னாசி ii. அன்னா முன்னா
iii. பலாப்பழம்

52. பின்வரும் பழங்களில் கூட்டுப்பழம் எது?

i. சோளம் ii. அன்னா முன்னா
iii. பலாப்பழம்

53. தாவரங்களை அழிப்பதனால் ஏற்படும் பாதிப்புகள்?

i. வெள்ளப்பெருக்கு ஏற்படும், வெப்பநிலை அதிகரிக்கும்


ii. மழைவீழ்ச்சி குறையும், வெப்பநிலை குறையும்

iii. விறகைப் பெறல், வெள்ளப்பெருக்கு ஏற்படும்.


54. கீழே தரப்பட்டுள்ள பென்சிலின் நீளம்?




55. தரப்பட்டுள்ள செவ்வகத்தின் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு யாது?




56. உருவில் நிழற்றப்பட்ட பகுதி?



i. 1/2 இலும் கூடியது
ii. 1/2 இலும் குறைந்தது
iii. 1/2 க்கு சமன்

57. பேருந்து ஒன்றில் 48 பேர் பயணம் செய்தனர். அதில் அரைவாசிப் பேர் ஆண்கள். மிகுதியில் 2/3 பங்கினர் பெண்கள். ஏனையோர் சிறுவர்கள். பேருந்தில் பயணம் செய்த சிறுவர்கள் எத்தனை பேர்?

58. ‘பொருட்கள் நிறைந்து காணப்பட்ட சந்தை’ என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. குறைந்தது ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

---

## விடைகள்

1. ii
2. i
3. iii
4. i
5. 
6. மலை
7. வழி
8. மழை
9. வலி
10. கிலி
11. மண்
12. புத்தகம்
13. நட்சத்திரம்
14. உருளைக்கிழங்கு
15. சுறுசுறுப்பு
16. புறம்
17. ஆழ்
18. நீல
19. iii
20. i
21. என்னுடைய அழகான புத்தகம்
22. நீ யார்?
23. காரியாலயம்
24. வகுப்பறை
25. ii
26. i
27. பொன்னுச்சாமி பல வித்தைகளைக் கற்றவன்
28. பார்வதி பல் துலக்கி முகம் கழுவினாள்
29. திரண்டால் மிடுக்கு
30. பலவான்
31. அம்மியும் நகரும்
32. ii
33. i
34. i
35. iv
36. iv
37. ii
38. i
39. iii
40. iv
41. iii
42. ஆண்கள் மலசலகூடம்
43. பெண்கள் மலசலகூடம்
44. அங்கவினர்
45. iii
46. i
47. ii
48. iii
49. i
50. i
51. ii
52. iii
53. i
54. 6 cm
55. 9 cm
56. iii
57. 8 பேர்
58. 



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 23

## தலைப்பு: மீன் தொட்டி

### பரிசில் பெறும் சித்திரங்கள்



எம்.எம். நுஹா ஸைனப்
நிக/பன்னவ மு.ம.க.
பன்னவ




பாத்திமா பசீனா
மே/பலந்த மு.வி.
அகலவத்த




எம்.எப்.எம். ரஸா
சிலா/சவரானை மு.வி.
சவரானை

### பாராட்டுக்குரிய சித்திரங்கள்




பாத்திமா ஆதிலா
மே/பலந்த மு.வி.
அகலவத்த




பாத்திமா அம்ரா
மே/பலந்த மு.வி.
அகலவத்த




ஆர்.எம். ரிஜ்வான்
அலியாவெடுனுவெவ மு.ம.வி.
கல்கமுவ



பாத்திமா சல்மா
மே/பலந்த மு.வி.
அகலவத்த




எம்.எப். ஹப்ஸா
நிக/பன்னவ மு.ம.க.
பன்னவ




பாத்திமா நப்லா
மே/பலந்த மு.வி.
அகலவத்த



ஹம்தா ஸரீப்
மா/அஜ்மிர் தே.பா.
உக்குவலை



ஸாக்கிரா ஷமான்
குளி/அல் ஹுமைரா மு.வி.
ஏதன்டவெல



ஸாகிர் ஷமான்
குளி/அல் ஹுமைரா மு.வி.
ஏதன்டவெல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Readers' Paradise

தலைநகரில் தலை நிமிர்ந்து நிற்கும் மாபெரும் புத்தக நிலையம்

# இஸ்லாமிக் புக் ஹவுஸ்

(வேறு கிளைகள் எதுவும் கிடையாது...)

www.ibh.lk

**ஒரே கூரையின் கீழ்**
**தமிழ், ஆங்கிலம், சிங்களம், அரபு மொழிகளில்...**

## ONLINE ORDERS & VPP ORDERS

- புனித அல்குர்ஆன் பிரதிகள்
- அகராதிகள்
- உளவியல் நூல்கள்
- தர்ஜுமாக்கள்
- கதைப்புத்தகங்கள்
- சமையல் புத்தகங்கள்
- இஸ்லாமிய நூல்கள்
- அல் ஹதீஸ் தொகுப்புக்கள்
- வரலாற்று நூல்கள்
- இலக்கியத் தொகுப்புக்கள்
- இலக்கண நூல்கள்
- கவிதைத் தொகுப்புக்கள்
- பாடசாலை துணை நூல்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- VCD/DVD

You Ring 011 573 6098 We Bring

அறிவுக் களஞ்சியத்தின் நுழைவாயில்...




Accepted:

MasterCard | VISA | AMERICAN EXPRESS

புதிய நூல்களின் தகவல்கள் அறிய
f<space>ibhbooks என Type செய்து
40404 க்கு அனுப்புங்கள்.

IBH இன் இலவச விநியோகம்
தற்போது உங்கள் வீடுகளுக்கே...
(நகர எல்லைக்குள் மாத்திரம்)



**தினமும் காலை 7:00 மணியிலிருந்து இரவு 9:00 மணி வரை உங்களுக்காக திறந்திருக்கும்**

## ISLAMIC BOOK HOUSE

77, Dematagoda Road | Maradana | Colombo- 09
Web: www.ibh.lk | Phone: 0115 925935

வெளியீடு மொத்த விற்பனை பகுதி : 0115 736098, 0772518641
தபால் மூலம் நூல்களைப் பெற : 011 2684851
புனித அல்குர் பிரதிகளை மொத்தமாக பெற : 0773171725

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org